விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 18 புதன்கிழமை (31.03.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 102

## பொலிஸார் தேவையற்று தாக்குதல் நடத்தினால் உயிர் பாதுகாப்புக்காக பதில் தாக்குதல் நடத்தலாம்

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண



(கொழும்பு)

பொலிஸார் தமது உத்தியோகபூர்வ சீருடையுடன் சிவில் நபர் மீது தேவையற்ற வகையில் தாக்குதல் நடத்தினால், உயிர் பார்துகாப்பிற்காக அவர் பதில் தாக்குதலை நடத்தக் கூடிய அதிகாரம் சட்டத்தில் இருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள் ளார்.

நேற்று இது தொடர்பாக ஊடகமொன்றுக்கு அளித்த நேர் காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மஹரகம பொலிஸ் நிலைய வீதிப் 19

## 17 வயது மாணவி சாவகச்சேரியில் சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி - கோவிற்குடியிருப்பு பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து மாணவி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தாயார் தண்ணீர் அள்ளச் 19

## மாகாண சபைத் தேர்தலை

# கலப்பு முறையில் நடத்த அரசாங்கம் யோசனை

### அமைச்சரவை இணைப் பேச்சாளர் உதய கம்மன்பில



(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலை தொகுதிவாரி மற்றும் விகிதாசார முறைகள் இணைந்த கலப்புமுறையில் நடத்துவதற்கு அரசு எதிர் பார்த்துள்ளது என அமைச்சரவை இணைப் பேச்சாளரான அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபைத் தேர்தல் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பாக கட்சித் 19

## வடக்குக்கு வருகிறார் ஜனாதிபதி கோட்டாபய

(வவுனியா)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் சனிக்கிழமை வவுனியாவிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஜனாதிபதியாக கோட்டாபய ராஜ 19

## மோ.சைக்கிள் மோதியதில் ஒருவர் உயிரிழப்பு

### கிளிநொச்சி ஏ9 வீதியில் சம்பவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஏ9 வீதியில் மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த பாதசாரி ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். 19

## யாழில் 22 பேர் உட்பட வடக்கில் நேற்று 29 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் 22 பேர் உட்பட வடக்கில் 29 பேருக்கு நேற்று கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 320 பேரின் மாதிரிகள் அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் அவர்களுக்கு 19

## இலங்கை கடற்பரப்பில் மீன் பிடிக்க இந்திய மீனவர்களுக்கு அனுமதியில்லை

### அமைச்சர் உதய கம்மன்பில தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக் கடற்பரப்பில் மீன் பிடிப்பதற்கு இந்திய மீனவர்களுக்கு அனுமதியளிக்க அரசு எந்தத் தீர்மானத்தையும் எடுக்கவில்லை என அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்களுக்கு இலங்கைக் கடலில் மீன்பிடிக்க அனுமதிப் 19

## புலிகளின் புதையல் தோண்டியவர்கள் கைது

### கிளிநொச்சி வட்டக்கச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வட்டக்கச்சி மாயனூர் காட்டுப் பகுதியில் புதையல் தோண்டுவதற்கு முற்பட்ட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர். 19

## தடைசெய்யப்பட்டுள்ள புலம்பெயர் அமைப்புகளுடன் தொடர்புபட்ட எவராயினும்

### உடனடியாகக் கைது சரத் வீரசேகர

3ஆம் பக்கம் பார்க்க

## உழவு இயந்திரம் மோதி சிறுவன் உயிரிழப்பு

(அம்பாறை)

அம்பாறை - அட்டாளைச்சேனை 19

## யாழ்.வரணி வீதியில் தமிழர்களின் தொல்லியல் அடையாளம் கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வரணி பகுதியில் வீதி அபிவிருத்தி பணி இடம் பெற்றிருந்த 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலத்தில் சுதந்திரக்கட்சி ஆட்சி அமைக்கும்

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

எதிர்காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தை அமைக்கும் என தாம் நம்புவதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மல்வத்து மற்றும் அஸ்கிரிய தலைமை பீடாதிபதிகளை நேற்று சந்தித்த மைத்திரி, ஊடகங்களுக்கு உரையாற்றும் போதே இதை குறிப்பிட்டார். தொடர்ந்து தெரிவிக்கையில்,

பாராளுமன்றத் தேர்தலில் சவால் இருந்தபோதிலும், எங்கள் கட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட 13 உறுப்பினர்களும் எளிதாக பாராளுமன்றத்திற்கு செல்லவில்லை.

சுதந்திரக்கட்சி அரசாங்கத்தை அமைக்கும் என்பதே எங்கள் நம்பிக்கை.

இதற்காக சுதந்திரக் கட்சியை சுற்றி ஒன்றுபட மக்களுக்கு அழைப்பு விடுப்பதாகவும் மைத்திரி குறிப்பிட்டார். (ம-03)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

வீடு வாடகைக்கு
யாழ்ப்பாணம், கோவில் வீதியில்
( நல்லூருக்கு அண்மையாக )
சகல தளபாட வசதிகளுடன் கூடிய வீடு
குறுகிய காலத்துக்கு வாடகைக்கு உண்டு.
077 285 0753
(6406)


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### ஏலவிற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தின் பின்வரும் கால்நடைகள் 07.04.2021 அன்று புதன்கிழமை எலக்கில் விர்பனை செய்யப்படும்.

| இல | இலக்கம் | வயது | கடா /மறி |
|---|---|---|---|
| 01 | *4303-0919-0066* | 4 வருடம் | கடா |
| 02 | *4303-0919-0095* | 2 வருடம் & 8 மாதம் | கடா |
| 03 | *4303-0919-0104* | 2 வருடம் & 5 மாதம் | கடா |
| 04 | *4303-0919-0113* | 2 வருடம் & 3 மாதம் | கடா |
| 05 | *4303-0919-0135* | 1 வருடம் & 9 மாதம் | கடா |
| 06 | *4303-0919-0142* | 1 வருடம் & 8 மாதம் | கடா |
| 07 | *4303-0919-0149* | 1 வருடம் & 6 மாதம் | கடா |
| 08 | *4303-0919-0150* | 1 வருடம் & 6 மாதம் | கடா |
| 09 | *4303-0919-0154* | 1 வருடம்& 5 மாதம் | கடா |
| 10 | *4303-0919-0155* | 1 வருடம் & 5 மாதம் | கடா |
| 11 | *4303-0919-0159* | 1 வருடம் & 5 மாதம் | கடா |
| 12 | *4303-0919-0161* | 1 வருடம் & 5 மாதம் | கடா |
| 13 | *4303-0919-0163* | 1 வருடம் & 5 மாதம் | கடா |
| 14 | *4303-0919-0165* | 1 வருடம் & 3 மாதம் | கடா |
| 15 | *4303-0919-0167* | 1 வருடம் & 3 மாதம் | கடா |
| 16 | *4303-0919-0169* | 1 வருடம் & 3 மாதம் | கடா |
| 17 | *4303-0919-0170* | 1 வருடம் & 3 மாதம் | கடா |
| 18 | *4303-0919-0176* | 1 வருடம் & 3 மாதம் | கடா |
| 19 | *4303-0919-0178* | 1 வருடம் & 2 மாதம் | கடா |
| 20 | *4303-0919-0185* | 1 வருடம் & 2 மாதம் | கடா |
| 21 | *4303-0919-0186* | 1 வருடம் & 2 மாதம் | கடா |
| 22 | *4303-0919-0191* | 11 மாதம் | கடா |
| 23 | *4303-0919-0194* | 11 மாதம் | கடா |
| 24 | *4303-0919-0021* | 6 வருடம் | மறி |
| 25 | *4303-0919-0023* | 6 வருடம் | மறி |
| 26 | *4303-0919-0046* | 4 வருடம் & 6 மாதம் | மறி |
| 27 | *4303-0919-0049* | 4 வருடம் & 5 மாதம் | மறி |
| 28 | *4303-0919-0079* | 2 வருடம் & 4 மாதம் | மறி |
| 29 | *4303-0919-0094* | 2 வருடம் & 8 மாதம் | மறி |
| 30 | *4303-0919-0106* | 2 வருடம் & 6 மாதம் | மறி |
| 31 | *4303-0919-0123* | 2 வருடம் & 1 மாதம் | மறி |
| 32 | *4303-0919-0139* | 1 வருடம் & 8 மாதம் | மறி |
| 33 | *4303-0919-0143* | 1 வருடம் & 8 மாதம் | மறி |
| 34 | *4303-0919-0164* | 1 வருடம் & 5 மாதம் | மறி |

இவ் ஏலவிற்பனையில் கால்நடைகளை வாங்குவதற்கு விரும்புவோர் 05.04.2021 (திங்கட்கிழமை) 10.30 மணிக்கு ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் கால்நடைகளை பார்வையிடலாம். பார்வையிட்ட பின்னர் மீளப்பெற முடியாத பதிவுக்கட்டணமாக ரூபா 500.00 இனைச் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ள வேண்டும். பற்றுச்சீட்டை பெற்றுக் கொண்டவர்கள் மட்டுமே ஏலவிற்பனையில் பங்குகொள்ள முடியும். ஏலவிற்பனைக்கு வருகை தரும்போது பற்றுச்சீட்டை கொண்டு வருதல் அவசியமானதாகும். ஏலவிற்பனையானது 07.04.2021 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் நடைபெறும். ஏலத்தில் வெற்றிபெறும் ஏலதாரர் தாம் கொள்வனவு செய்த கால்நடைகளுக்கான முழுத்தொகையையும் உடனடியாகச் செலுத்தி அன்றைய தினமே கால்நடைகளை கொண்டு செல்ல வேண்டும்.

பதிவாளர் (C1851)


22ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
கிருஸ்ணபிள்ளை ராஜ்குமார் (B.AF)
(உப அதிபர் - வீரபுரம் மணிவாசகர் வித்தியாலயம், வவுனியா)

எத்தனை ஆண்டுகளானாலென்ன
இத்தரை மீதிலே உன்றன்
சத்திய வாழ்வு நிலைத்திடுமே
உம்மோடு வாழ்ந்த கணங்கள்
எம்மோடு என்றும் கலந்திருக்கும்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-1850)

" கிருஸ்ணவாசா "
விக்னேஸ்வரா கல்லூரி வீதி,
கரவெட்டி.
021 226 1312
குடும்பத்தினர்


### தேசமான்ய M.T.S இராமச்சந்திரன் நேற்று புதிய இரண்டாம் மொழி வகுப்பை கௌதாரிமுனை விநாசியோடை மத்திய மகா வித்தியாலயத்தில் காலை 11.00 மணியளவில் ஆரம்பித்துவைத்தார். அவருடன் அந்த பகுதிக்கு பொறுப்பான மேஜர் ஜெனரல் அஜித் திசநாயக்கவும் பாடசாலை அதிபரும் மற்றும் பெற்றோரும் இணைந்து ஆரம்பித்து வைத்தனர்.



நேற்று பூநகரி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கௌதாரிமுனையை சேர்ந்த விநாசியோடை மகா வித்தியாலயத்தில் காலை 11.00 மணியளவில் மாணவர்களுக்கான இலவச ஆங்கில, சிங்கள வகுப்புக்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த வகுப்புக்களை ஆரம்பித்து வைத்த இந்து பௌத்த கலாசார பேரவையின் செயலாளர் M.T.S. இராமச்சந்திரனுடன் பாடசாலை அதிபர் மற்றும் பூநகரி பகுதிக்கான இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் அஜித் திசநாயக்கவும் அவருடன் மற்றும் இராணுவ அதிகாரிகளும் கலந்துகொண்டனர். அங்கே அறுபதிற்கும் மேற்பட்ட பெற்றோர்களும் கலந்துகொண்டு தங்களுடைய பிள்ளைகளின் நலன்கருதி இவ்வாறான மொழி வகுப்புகளை இலவசமாக ஆரம்பித்து வைத்ததிற்கு தேசமான்ய M.T.S. இராமச்சந்திரன் அவர்கட்கு நன்றிகளை தெரிவித்தனர். அதுமட்டுமன்றி கிராமம் தோறும் ஜனாதிபதி மக்களை சந்தித்துவருகிறார். அப்படி வடக்கு மாகாணத்தில் தங்களுடைய கிராமத்தையும் தெரிவுசெய்து அவர் கலந்துகொள்வதை தாங்கள் பிரியமாக விரும்புகிறோம் என்பதனை இராமச்சந்திரனிடம் விநயமாக கேட்டுக்கொண்டனர். அவ்வாறே தங்களுடைய கிராமத்தில் புராதன சிவன் கோயில் ஒன்று மூடி வைக்கப்பட்டிருப்பதனால் தங்களுடைய ஆலயத்தின் வழிபாட்டிற்கான சகல ஏற்பாடுகளையும் செய்துதருமாறு ஆலயத்தின் நிர்வாகிகள் கேட்டுக்கொண்டனர். (6403)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடைசெய்யப்பட்ட புலம்பெயர் அமைப்புக்களுடன் தொடர்புபட்ட எவராயினும் கைது- சரத் வீரசேகர

(கொழும்பு)

**தடை செய்யப்பட்ட புலம்பெயர் அமைப்புகளின் செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட எவரேனும் இலங்கையில் செயற்பட்டால் அவர்கள் உடனடியாகக் கைது செய்யப்படுவார்கள் என்று அரசு அறிவித்துள்ளது.**



மேலும் குறித்த அமைப்புகளின் செயற்பாட்டாளர்கள் இலங்கைக்கு வருகை தந்தாலும் அவர்கள் கைது செய்யப்படுவார்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் பயங்கரவாத அமைப்புடன் தொடர்பு கொண்டுள்ளமை, இஸ்லாமிய பயங்கரவாத கொள்கையை பரப்புகின்றமை மற்றும் அவர்களுக்காக நிதி சேகரிப்பில் ஈடுபடுகின்றமை போன்ற காரணங்களால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது என அரசு தெரிவித்துள்ளது.

நீண்டகாலமாக இலங்கை விவகாரங்களில் கண்காணித்து செயற்பட்டு வருகின்ற புலம்பெயர் தமிழ் அமைப்புகளையும் தனிப்பட்ட முஸ்லிம் மற்றும் தமிழ் உறுப்பினர்கள் உட்பட 400 இற்கும் அதிகமானவர்களின் பெயர்களையும் இலங்கை அரசு தடை செய்துள்ளது.

இந்தத் தடைக்கான காரணம் குறித்து பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, அரசின் நிலைப்பாட்டை ஊடகங்களுக்கு தெரிவித்தார். (நி-4)

## கொரோனா வைரஸ் தொற்றினை கண்டறியும் இலகுவான பரிசோதனை; அறிமுகப்படுத்தியது பேராசிரியர் குழு

(கொழும்பு)

இலங்கையரான பேராசிரியர் நீலிகா மாலவிகே உள்ளிட்ட ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக நிபுணர் குழு இணைந்து கொரோனாத் தொற்றின் நோய் எதிர்ப்புடலை இனங்காணும் இலகுவான இரத்த பரிசோதனை முறைமையை கண்டுபிடித்துள்ளனர்.

விரல் நுனியில் இருந்து எடுக்கப்படும் ஒரு சொட்டு இரத்தத்தினைக் கொண்டே இந்த பரிசோதனை மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரிசோதனை முறைமை மிக விரைவான மற்றும் செயன்முறைக்கு இலகுவானது என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை, தாய்வான், இந்தியா, தாய்லாந்து, பிரான்ஸ் மற்றும் பிரித்தானியாவைச் சேர்ந்த ஆய்வாளர்களும் இந்த ஆய்வில் பங்கேற்றுள்ளனர்.

3,000 குருதி மாதிரிகளை கொண்டு ,இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாக ஒக்ஸ்போர்ட் பல்கலைகழக விசேட நிபுணர் குழுவில் பங்கேற்றிருந்த ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவத்துறை பேராசிரியர் நீலிகா மலவிகே தமது டுவிட்டரில் தெரிவித்துள்ளார். (நி-4)

## புலம்பெயர்ந்தோர் யாருமில்லையாம்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து யாரும் வெளியேற்றப்படவில்லை. ஆகவே புலம்பெயர்ந்தோர் என யாரும் இல்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் உதய கம்மன்பில, புலம்பெயர் என்ற சொல்லை இலங்கை அங்கீகரிக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

வெளிநாட்டவர்களுடன் நெருக்கமான உறவுகளை அரசாங்கம் பேணும் என்றாலும் புலிகளின் சித்தாந்தங்களை அல்லது பிரிவினைவாதத்தை ஊக்குவிக்கும் அனைத்து குழுக்களையும் அரசாங்கம் தடை செய்யும் என்றும் அவர் குறிப்பிட்டார். (நி-4)

## கச்சதீவு ஒப்பந்தத்தை ரத்து செய்வதன் மூலம் தமிழக மீனவர்களை பாதுகாக்க முடியும்

## திருமாவளவன் வலியுறுத்து

(சென்னை)

கச்சதீவு ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதன் மூலமே தமிழக மீனவர்களைப் பாதுகாக்க முடியும் என விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் மக்களவை உறுப்பினருமான தொல்.திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார்.


கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தை அதானி குழுமத்திற்குப் பெற்றுத் தருவதற்காக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சரையும் இந்திய பாதுகாப்புத்துறை ஆலோசகரையும் இலங்கைக்கு அனுப்பி பேச்சுவார்த்தை நடத்திய மோடி அரசாங்கம் தமிழக மீனவர்களின் பிரச்சினையில் அத்தகைய அக்கறையைக் காட்டுவதில்லை என அவர் விடுத்துள்ள அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கச்சதீவு ஒப்பந்தம் இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிரானது என தெரிவித்துள்ள தொல். திருமாவளவன், பாரதிய ஜனதா கட்சி இன்று மிகப் பெரும்பான்மையான பலத்தோடு ஆட்சியில் இருக்கும் நிலையில், கச்சதீவு ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்கு தயங்குவது ஏன் என கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்திய இறையாண்மை மீது அரசாங்கத்திற்கு உண்மையான அக்கறை இருந்தால், உடனடியாக கச்சதீவு ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (நி-4)

## மாகாணசபைத் தேர்தலுக்கு 500 மில்லியன் செலவழிப்பது வீண்

## இது தேசிய குற்றம் என்கின்றார் தேரர்



(கொழும்பு)

மாகாண சபை தேர்தலினை நடத்துவதற்கு சுமார் 500 மில்லியன் ரூபாய் செலவாகும். இது தேசிய குற்றமாகும் என பிக்குகள் முன்னணியின் தலைவர் பெங்கமுவே நாலக தேரர் தெரிவித்தார்.

மேலும் மாகாண சபை தேர்தலை பீதியுடன் நடத்த வேண்டாமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த ஊடக சந்திப்பில் பெங்கமுவே நாலக தேரர் மேலும் தெரிவித்ததாவது, "மாகாண சபை அமைப்பு இந்த நாட்டுக்கு அவசியமான ஒன்றல்ல. அதன் பலத்தினால் பெறப்பட்டது ஒன்றுமல்ல.

மேலும் இதனால் நாட்டுக்கு எந்த நன்மையும் இல்லை. மாகாண சபை தேர்தல் தோல்வியடைந்ததால் மக்கள் எவரும் பாதிப்புக்கு உள்ளாகவில்லை.

இதேவேளை ஜனாதிபதியும் பிரதமரும் புதிய அரசியலமைப்பைக் கொண்டுவருவதாக உறுதியளித்துள்ளனர். அதன்போது மாகாண சபைகள் தொடர்பாக ஒரு முடிவை எடுக்க முடியும்.

எனவே மாகாண சபை தேர்தல் குறித்து பீதி அடைய வேண்டாம் என நாங்கள் அரசாங்கத்திடம் கூறுகிறோம்.

மேலும் தற்போதைய சூழ்நிலையில் மாகாண சபை தேர்தலுக்காக சுமார் 500 மில்லியன் ரூபாய் செலவழிப்பது தேசிய குற்றமாகும்.

இதேவேளை மாகாண சபைத் தேர்தலையை ஒத்தி வைக்கக் கோரி, பிக்குகள் கையெழுத்திட்ட கடிதமொன்றும் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளது" என அவர் தெரிவித்தார். (நி-4)



இலங்கைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள வியட்நாம் சோசலிசக் குடியரசின் தூதுவர் ஹோ தீ தான் ரக் நேற்று முற்பகல் ஜனாதிபதி மாளிகையில் வைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்து தனது நியமனக் கடிதத்தை கையளித்தார்.

## நாவலப்பிட்டியில் ரயில் தடம்புரள்வு

(கொழும்பு)

பதுளையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயில் நாவலப்பிட்டியில் தடம் புரண்டுள்ளது.

நாவலப்பிட்டி ரயில் நிலையத்திற்கு அருகில் நேற்று நண்பகல் தயில் தடம்புரண்டுள்ளது. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## ஏலவிற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தின் பின்வரும் கால்நடைகள் 07.04.2021 அன்று புதன்கிழமை ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

| இல | இலக்கம் | வயது | மாடுகள் |
|---|---|---|---|
| 01 | 4303-0919-0004 | 09 வருடங்கள் | பசு |
| 02 | 4303-0919-0006 | 09 வருடங்கள் | பசு |
| 03 | 4303-0919-0034 | 5 வருடங்கள் & 5 மாதங்கள் | பசு |
| 04 | 4303-0919-0036 | 6 வருடங்கள்& 4 மாதங்கள் | பசு |
| 05 | 4303-0919-0041 | 4 வருடங்கள் & 6 மாதங்கள் | நாம்பன் |
| 06 | 4303-0919-0045 | 4 வருடங்கள் & 4 மாதங்கள் | பசு |
| 07 | 4303-0919-0057 | 3 வருடங்கள் & 5 மாதங்கள் | பசு |
| 08 | 4303-0919-0063 | 3 வருடங்கள் & 2 மாதங்கள் | கன்னிப்பசு |
| 09 | 4303-0919-0064 | 3 வருடங்கள் & 2 மாதங்கள் | பசு |
| 10 | 4303-0919-0067 | 2 வருடங்கள் & 7 மாதங்கள் | நாம்பன் |
| 11 | 4303-0919-0068 | 2 வருடங்கள் & 6 மாதங்கள் | நாம்பன் |
| 12 | 4303-0919-0070 | 2 வருடங்கள் & 5 மாதங்கள் | நாம்பன் |
| 13 | 4303-0919-0071 | 2 வருடங்கள் & 5 மாதங்கள் | நாம்பன் |
| 14 | 4303-0919-0072 | 2 வருடங்கள் & 5 மாதங்கள் | நாம்பன் |
| 15 | 4303-0919-0074 | 2 வருடங்கள் & 4 மாதங்கள் | நாம்பன் |
| 16 | 4303-0919-0075 | 2 வருடங்கள் | நாம்பன் |
| 17 | 4303-0919-0076 | 1 வருடங்கள் & 11 மாதங்கள் | கன்னிப்பசு |
| 18 | 4303-0919-0082 | 1 வருடங்கள் & 4 மாதங்கள் | நாம்பன் |
| 19 | 4303-0919-0094 | 4 மாதங்கள் | நாம்பன் கன்று |
| 20 | 4303-0919-0095 | 4 மாதங்கள் | நாம்பன் கன்று |
| 21 | 4303-0919-0098 | 2 மாதங்கள் | நாம்பன் கன்று |
| 22 | 4303-0919-0099 | 2 மாதங்கள் | பசுக்கன்று |

இவ் ஏலவிற்பனையில் கால்நடைகளை வாங்குவதற்கு விரும்புவோர் 05.04.2021 (திங்கட்கிழமை) 10.30 மணிக்கு ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் கால்நடைகளை பார்வையிடலாம். பார்வையிட்ட பின்னர் மீளப்பெற முடியாத பதிவுக்கட்டணமாக ரூபா 500.00 இனைச் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ள வேண்டும். பற்றுச்சீட்டை பெற்றுக் கொண்டவர்கள் மட்டுமே ஏலவிற்பனையில் பங்குகொள்ள முடியும். ஏலவிற்பனைக்கு வருகை தரும்போது பற்றுச்சீட்டை கொண்டு வருதல் அவசியமானதாகும்.

ஏலவிற்பனையானது 07.04.2021 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் நடைபெறும். ஏலத்தில் வெற்றிபெறும் ஏலதாரர் தாம் கொள்வனவு செய்த கால்நடைகளுக்கான முழுத்தொகையையும் உடனடியாகச் செலுத்தி அன்றைய தினமே கால்நடைகளை கொண்டு செல்ல வேண்டும்

பதிவாளர்

(C-1852)

# விக்ரம் - ராஜன் - கங்கு வெற்றிக்கிண்ணம் கிறாஸ்கொப்பர்ஸ் அணி சாதனை



விக்ரம் – ராஜன் – கங்கு வெற்றிக் கிண்ணத்திற்காக கொக்குவில் வளர்மதி விளையாட்டுக் கழகமும் சனசமூக நிலையமும் இணைந்து 30 ஆவது ஆண்டாக நடத்தும் 30 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட தொடரின் PLAY OFF சுற்றில் QUALIFYER ii போட்டியில் கிறாஸ்கொப்பர்ஸ் அணி, ஓல்ட்கோல்ஸ் அணியை 147 ஓட்டங் களால் வெற்றி பெற்றதுடன் இறுதிப் போட்டிக்கும் தகுதி பெற்றமை குறிப்பிடத் தக்கது.

இப்போட்டியில் கிறாஸ்கொப்பர்ஸ் அணி இரு மாபெரும் சாதனைகளை நிலை நாட்டியுள்ளது. முதலாவது சாதனையாக கிறாஸ்கொப்பர்ஸ் அணி, யாழ். நகரில் 1983 ஆம் ஆண்டு ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் கடின பந்து துடுப்பாட்டப் போட்டியை ஆரம்பித்து வைத்துள்ளது.

அன்றில் இருந்து இன்று வரை நடைபெற்ற துடுப்பாட்டத் தொடர்களில் முதன் முறையாக கிறாஸ்கொப்பர்ஸ் அணியினர் இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டாவது சாதனை, விக்ரம், ராஜன், கங்கு தொடரில் 30 ஓவர் கொண்ட போட்டியில் ஓர் அணி ஆகக் கூடிய ஓட்டங்களை (30 ஓவர்களில் 316/9) பெற்றமை குறிப்பிடத்தக்கது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பர்ஸ் அணி 30 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 316 ஓட்டங்களைப் பெற்றது.

கோகுலன் 45, மதூஸன் 98, றிவுஸன் 19, வரலக்ஸன் 33, அஜித் 66, சுஜீவன் 19 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஓல்ட்கோல்ஸ் அணி சார்பாக நிரோஸன் 3, கஜேந்திரன் 2, பிரியலக்ஸன், ஜின்துஸன், சிந்து, திலீபன் தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஓல்ட்கோல்ஸ் அணி 21.1 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

நிரோஸன் 55, திலீபன் 49, மாதவரூபன் 14, கஜேந்திரன் 22 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் கிறாஸ்கொப்பர்ஸ் அணி சார்பாக மதூஸன், கிருஷான் தலா 3 இலக்கினையும், சுஜீவன் 2 இலக்கினையும் ரசிகரன் ஒரு இலக்கினையும் கைப்பற்றினர். கிறாஸ்கொப்பர்ஸ் அணி இறுதிப் போட்டியில் ஜொலிஸ்ரார் அணியை எதிர்வரும் 18ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் எதிர் கொள்வர் என்பது குறிப்பிடத் தக்கது.


அத்துடன் கிறாஸ்கொப்பர்ஸ் .விளையாட்டுக்கழகம் 1987 ஆம் ஆண்டு யாழ். ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தினரால் 6 பேர்கொண்ட 5 ஓவர்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரில் முதன் முதலில் இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டமையும் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தை முதன் முதலில் கைப்பற்றிக் கொண்டமை குறிப்பிடத் தக்கது. (4)

# கடந்து போகாத ஈர நினைவுகள்...

கலைவாரிதி, கலாபூஷணம்


## இரத்தினசிங்கம் கிருஷ்ணதுரை (பண்ணாகம்)

திதி : 31.03.2021 சங்ஹட சதுர்த்தி



**தாயின் மடியில்**
**22.09.1944**

**மண்ணின் மடியில்**
**08.04.2015**



சிலர் அன்பை வார்த்தைகள் சொல்லிவிடும்
சிலர் அன்பை உணர்வுகள் உணர்த்திவிடும்
சிலர் அன்பை கண்களும் காட்டிவிடும் - இருந்தும்
சிலர் அன்பை எப்போதும்
புரிந்துகொள்ள எல்லோராலும் முடிவதில்லை
அதனைப் புரிந்து கொள்வதற்குள் - காலம்
அவர்களை கடத்திவிடுகின்றது.
அப்பாக்களும் அப்படித்தான்
புரியமுடியாத அன்பின் புன்னகை மனிதர்கள்.

விளையாட்டில் விற்பன்னராய் வெற்றிக்கிண்ணங்கள் வென்றீர்கள்.
எழுத்தில் கதை சொல்லி எழுத்தாளனாய் உயர்ந்தீர்கள்.
நடிப்பில் இரசிக்கவைத்து மற்றவரைக் கவர்ந்தீர்கள்.
நாடகத்தால் உங்கள் பெயர், சுற்றம், ஊர் முழுதும் அறிந்தது.
திறமைகள் வளர்ந்ததனால் நாட்டின் உச்ச விருதையும்
பெற்று நீங்கள் மகிழ்ந்தீர்கள் -ஆனால்
காலனவன் அவசரமாய் கணக்கை முடித்துக் கொண்டான்.

நேற்றுப் போல் இருக்கின்றது உங்களுடன் உறவாடி
நாங்கள் மகிழ்ந்திருந்தது - ஆனால்
வேகமாகவே நாட்கள் கடந்துவிட்டன
வருடங்கள் ஓடி விட்டன. இருந்த போதும்
உங்களின் நினைவுகள் மட்டும் எம்மை விட்டு
ஒருபோதும் கடந்து செல்லவும் இல்லை,
ஓடி மறையவும் இல்லை - இப்போது

நினைத்தாலும் உங்கள் குரலொலி எம் காதில் ஒலிக்கின்றது.
இப்போது நினைத்தாலும் உங்கள்
புன்னகை எம் கண்களில் தெரிகின்றது.
உங்களை இழந்ததாய் இன்னும் நாம்
நம்பவில்லை பிரிந்ததாய் மட்டுமே மனதில் பதியவைத்து
உங்கள் நினைவுடன் இன்றும் நடக்கின்றோம்...

(C-1853)

உங்கள் பிரிவுத் துயருடன் : மனைவி, சகோதரர்கள், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பண்ணாகம், சுழிபுரம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நாவில் தமிழர்களுக்கு இந்தியா துரோகமிழைத்துள்ளது

## தமிழகம் சென்ற மோடிக்கு எதிராக போராட்டங்கள்

(கொழும்பு)

**இலங்கைக்கு எதிரான ஐ.நா. மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவளிக்காமையைக் கண்டித்து நேற்று தேர்தல் பிரசாரத்துக்காக தமிழகம் வந்துள்ள இந்தியப் பிரதமர் மோடிக்கு எதிராகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.**



கோயம்புத்தூரில் தந்தை பெரியார் திராவிடர் கழகத்தை சேர்ந்தவர்களும், ஆதரவாளர்களும் ஒன்றுகூடி கறுப்புக் கொடி ஏந்தி இந்தியப் பிரதமரின் வருகைக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் போராட்டத்தில் ஈடுபட்ட தந்தை பெரியார் திராவிடர் கழக பொதுச் செயலாளர் உள்ளிட்ட 100க்கும் மேற்பட்டோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2009 ஆம் ஆண்டு ஈழத்தில் நடந்த மனித உரிமை மீறல் தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும் என்று ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தில் பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் கொண்டுவந்த தீர்மானத்தை ஆதரிக்காமல் இந்தியா வெளிநடப்புச் செய்து தமிழர்களுக்கு துரோகம் இழைத்துவிட்டதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றஞ் சாட்டினர்.

அத்துடன், திருப்பூர் மாவட்டம் - தாராபுரம் பகுதியிலும் இந்தியப் பிரதமர் வருகையை எதிர்த்துப் போராட்டங்கள் இடம்பெறுகின்றன. தமிழக விவசாயிகளும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.

இதேவேளை, இந்தியப் பிர தமரின் தமிழக வருகையை எதிர்த்து டுவிட்டர், பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைத்தளங் களில் "கோ பக் மோடி" (#Go BackModi) என்ற பிரசாரம் தீவிரமாகி வருகிறது. (நி-4)

## பொலிஸ் அதிகாரியின் மிருகத்தனம் மன்னிக்க முடியாதது

### உதய கம்மன்பில

(கொழும்பு)

பொலிஸ் மிருகத்தனத்தை எந்தவகையிலும் மன்னிக்க போவதில்லை என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். பன்னிப்பிட்டி பகுதியில் லொறி சாரதியை தாக்கிய பொலிஸ் அதிகாரி மீது சட்ட நடவடிக்கை எடுக்க பொலிஸ்மா அதிபரிடம் கேட்டுக்கொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெற்ற வாராந்திர அமைச்சரவை ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், உலகம் முழுவதும் இது போன்ற சம்பவங்கள் இடம்பெறும் நிலையில் அரசாங்கத்தை குறைகூற முடியாது என குறிப்பிட்டார்.

அமெரிக்காவில்கடந்த ஆண்டு பொலிஸ் அதிகாரியால் ஒரு கறுப்பினத்தவர் கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்ட சம்பவத்தின்போது அமெரிக்க அரசாங்கத்தை எவரும் குறைகூறவில்லை என்றும் சுட்டிக் காட்டினார். (நி-4)

# இந்தியாவின் வலியுறுத்தலால் மாகாணசபைத் தேர்தல் விரைவில் நடைபெறும்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விரைவில் மாகாணசபைத் தேர்தலை நடத்துவார். இந்தியா இது தொடர்பில் வலியுறுத்தியுள்ளமையினால் ஜனாதிபதி அதற்கான நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுப்பார் என்று மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பிற்கான ஜே.வி.பி.யின் பரிந்துரைகளை கையளித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது மக்களின் பெருமளவான தேவைகள் ஜெனீவாவில் பிரேரணை நிறைவேற்றப்பட்டால் அல்லது இந்திய பிரதமரால் தெரிவிக்கப்பட்டால் மாத்திரமே பூர்த்தி செய்யப்படுகின்றன. அவ்வாறான நிலைமையே தற்போது நாட்டில் உருவாகியுள்ளது என்றார்.(நி-4)

# இனத்திற்கு துரோகமிழைத்துவிட்டு ராஜபக்ஷக்களுக்கு ஜால்ரா அடிக்கும் பிள்ளையான்

(மட்டக்களப்பு)

பாராளுமன்றம் சென்றுவிட்டால் எதை வேண்டுமானாலும் பேச முடியும் என்று நினைத்து விடாதீர்கள் என பிள்ளையானுக்கு ஐக்கிய தேசிய கட்சியின் வாகரை பிரதேச சபை உறுப்பினர் எம்எச்றஹீம்முஹம்மட் பதில் வழங்கியுள்ளார்

பாராளுமன்ற உறுப்பினர் பிள்ளையானின் உரைக்கு தனது கண்டனத்தை தெரிவிக்கும் வகையில் நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முதலில் நீங்கள் யார் என்பதை தெரிந்துகொண்டு முஸ்லிம்களுக்கெதிராக குரல்கொடுப்பதைப் பற்றி சிந்தியுங்கள்.

கடந்த மூன்று தசாப்த காலமாக விடுதலைப் போராட்டம் எனக்கூறி அப்பாவி தமிழ் மக்களை ஏமாற்றி, இளைஞர்களின் உயிர்களை காவு கொண்டு இறுதியில் ராஜபக்ஷக்களுக்கு ஜால்ரா அடித்து உங்களது தலைவனைக் காட்டிக் கொடுத்து, உங்கள் இனத்துக்கே துரோகம் செய்தது உங்களைப் போன்றவர்கள் தான்.

இந்நாட்டில், கிழக்கு மாகாணத்தில் மட்டு மல்லாது அனைத்துப் பிரதேசங்களிலும் முஸ்லிம்களின் உயிரையும் உடைமையையும் பறித்து அநாதைகளாக்கியதும் உங்களைப் போன்றவர்கள்தான்.

இந்த நாட்டில் யுத்தம் என்ற ஒன்றை ஆரம்பித்து பல மிலேச்சத்தனமான தாக்குதல்களை மேற்கொண்டதும் உங்களைப் போன்றவர்கள் தான்.

எனவே எமது மார்க்கத்தையும் முஸ்லிம் சமூகத்தையும் விமர்சிக்க முன் சற்று சிந்தியுங்கள் என குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-4)

# மாகாண சபைத் தேர்தல் குறித்த அமைச்சரவை முடிவு ஒத்திவைப்பு

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் குறித்து நேற்று முன்தினம் இரவு கூடிய அமைச்சரவையில் முடிவெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அது குறித்த முடிவேதும் எடுக்கப்படவில்லை.

இது குறித்து மீண்டும் ஒரு முறை கூடி ஆராய்ந்து தீர்மானம் எடுப்பதென அமைச்சரவை முடிவெடுத்துள்ளதாக அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

மாகாண சபைத் தேர்தலை இரண்டு வழிமுறைகளின் கீழ் நடத்துவது குறித்து அமைச்சரவை பத்திரமொன்றை உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார்.

இந்த விடயம் குறித்து அமைச்சரவை கூடி ஆராய்ந்த போதும் முடிவேதும் எடுக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

எந்த முறைமையின் கீழ் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது என்பது குறித்து முடிவெடுக்க முன்னர் இது குறித்து கட்சித் தலைவர்களின் அபிப்பிராயத்தைப் பெறுவதெனவும் அதன் பின்னரே இறுதி முடிவெடுப்பதெனவும் அமைச்சரவை முடிவு செய்துள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (நி-4)

## கால்வாய்க்குள் பாய்ந்த கார் எட்டு வயதுச் சிறுமி உயிரிழப்பு

(கொழும்பு)

சாரதியின் தூக்க கலக்கத்தால் கால்வாய்க்குள் கார்பாய்ந்து விபத்துக்குள்ளானதில் எட்டு வயது சிறுமி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

ராஜாங்கனை பகுதியில் நேற்றுக் காலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பயணித்த நிலையிலேயே இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-4)

# திருமணப் பதிவுக்கான கட்டணம் அதிகரிப்பு



(கொழும்பு)

திருமணப் பதிவுக்கான கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பான அமைச்சரவைப்பத்திரத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முன்தினம் அமைச்சரவையில் சமர்ப்பித்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதற்கமைய 2500 ரூபா வரை திருமணப் பதிவுக் கட்டணத்தை அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திருமண நாள் குறித்து அறிவிக்கப்பட்டு 12 நாட்களுக்குமுன் வீடுகளில் திருமணப் பதிவு நடத்தப்பட்டால் அதற்கான புதிய கட்டணமாக 1000 ரூபாவை நிர்ணயிக்கவும் ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது.

அதேபோல, திருமண மண்டபத்தில் வைத்து பதிவாளர் முன் பதிவுசெய்வதற்கான கட்டணத்தை 1500 ரூபாவாக அதிகரிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார தொண்டர்கள் பிரச்சினை அமைச்சரவையில் பேசி தீர்வு பெறப்படும்



(சாவகச்சேரி)

**வடக்கு மாகாண சுகாதார தொண்டர்களின் பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சரவையில் பேசி உரிய தீர்வு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பேன் என கமத்தொழில் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே உறுதியளித்துள்ளார்.**

நேற்று முன்தினம் திங்கட் கிழமை யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவர் அங்கஜன் இராமநாதனின் ஏற்பாட்டில் கொழும்பில் சுகாதாரத் தொண்டர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது சுகாதாரத் தொண்டர்கள் தமக்குரிய ஆவணங்களையும் அமைச்சரிடம் கையளித்திருந்தனர்.

கடந்த 2019 ஆம் ஆண்டு 450 பேருக்கு சுகாதாரப் பணியாளர்கள் நியமனம் சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் அப்போதைய ஆளுநரினால் வழங்கப்படவிருந்த வேளையில் குறித்த நியமனத்தில் முறைகேடு இடம்பெற்றிருப்பதாகவும் தமக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பதாகவும் இன்னொரு தரப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதனை அடுத்து குறித்த நியமனம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் தற்போது பாதிக்கப்பட்ட சுகாதாரத் தொண்டர்கள் தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் வேளையில் யாழ்.வந்திருந்த கமத்தொழில் அமைச்சர், அவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறிந்ததுடன்,

இவ் விடயத்தை அமைச்சரவைக்குக் கொண்டு சென்று தீர்வு பெற்றுக் கொடுக்கவும் முயற்சித்துள்ளார். (5-4-30)

# தீர்த்தக்கேணி கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கைதடி வீரகத்திப்பிள்ளையார் கோயில் வீரகஜமுக புஷ்கரணி தீர்த்தக்கேணி கும்பாபி ஷேகம் நாளை மறுதினம் 02 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.30 மணியளவில் நடைபெறும்.

பக்தர்கள் சுகாதார விதிமுறைகளைப் பேணி கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கோவில் பரிபாலன சபை அறிவித்துள்ளது. (5-4-8)

# மாரி காலத்திற்கு முன்னர் வீதியை புனரமைக்க வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட இடைக்குறிச்சி கிராம உத்தியோகத்தர் பிரிவையும் கரம்பைக்குறிச்சி கிராம உத்தியோகத்தர் பிரிவையும் பிரிக்கின்ற ஊர் எல்லை வீதியானது பல வருடங்களுக்கு மேலாக புனரமைப்பும் இன்றி குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது.

அத்துடன் மழை காலத்தில் வெள்ள நீர் நிறைந்து வீதியை மூடி நிற்பதாகவும் இதனால் நீண்ட தூரம் சுற்றி மாற்று வீதியினூடாகவே தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய நிலை மக்களுக்கு ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இவ் வீதிப்புனரமைப்பு தொடர்பாக கடந்த காலங்களில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்திய போதிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையென மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இந்த வருடத் திலாவது மழைகாலம் தொடங்குவதற்கு முன்பாக இவ் வீதியை புனரமைக்க உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-103)

# தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவு பொருட்கள் வழங்கி வைப்பு

(நல்லூர்)


நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட திருநெல்வேலி பாற்பண்ணைக் கிராமத்தில் கொரோனாத் தொற்றுக் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ள நூறு குடும்பங்களுக்கு நேற்றுச் செவ்வாய்க் கிழமை உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

யாழ்.மாநகர முதல்வர் மணிவண்ணன், நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் மயூரன் ஆகியோரின் ஏற்பாட்டில் புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்ந்து வரும் கொட்வின் தினேஸ், முரளி, பிரியா அமலன் ஆகியோரின் நிதிப் பங்களிப்பில் மேற்படி உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. (5-4-15)

# புனரமைப்பு வேலைகள் ஆரம்பம்

(நல்லூர்)

கடந்த 28 ஆம் திகதி விசமிகளால் எரியூட்டப்பட்ட கிட்டுப்பூங்காவின் முகப்பினை மீளவும் புனரமைப்பு செய்கின்ற வேலைகளை யாழ். மாநகர சபை ஆரம்பித்துள்ளது. யாழ். மாநகர சபை பணியாளர்களினால் குறித்த வேலைகள் இடம்பெற்று வருகின்றன. (5-4-33)



# ஆட்சேர்ப்புக்கான திறந்த போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சமூக சேவை உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை 03.04.2021ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

மேலும் குறித்த பரீட்சைக்கு விண்ணப்பிக்க தகைமையுடைய பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் யாவும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் "செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்" எனும் முகவரியுடனோ அல்லது 021 221 9939 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறும் அனுமதி அட்டைகள் இருந்தால் மட்டும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் எனவும் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளர் சி.திருவாகரன் அறிவித்துள்ளார். (5-4)



பிரித்தானிய ஆவரங்கால் ஒன்றியம்-ஆவரங்கால் மத்திய நம்பிக்கை நிதியம் என்பவற்றின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நிகழ்வு நேற்று ஆவரங்கால் சிவன் கோவில் விழா மண்டபத்தில் இடம்பெற்றது.

(படம்:-ரவி[illegible])

# அடிக்கல் நாட்டல்

(குப்பிழான்)

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி ஆலயத் தலைவாசல் கோபுரம் அடிக்கல் நாட்டும் வைபவம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் இடம் பெறவுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.(5-4-18)





குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த 20 பெண்களுக்கு உலருணவுப் பொதிகளும் தெரிவு செய்யப்பட்ட 70 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் கர்ப்பிணித் தாய்மார்கள் 40 பேருக்கு சுகாதாரப் பொருட்கள் மற்றும் குழந்தைகளுக்குத் தேவையான அவசியப் பொருட்கள் என்பன வழங்கும் நிகழ்வு காங்கேசன்துறை. பிரதேசத்தில் அமைந்துள்ள திஸ்ஸ விகாரையில் கடந்த 28 ஆம் திகதி யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா தலைமையில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குண்டுத்தாக்குதல் குறித்து இந்தியாவுக்கு முன்பே இலங்கையை எச்சரித்த பாகிஸ்தான்

(கொழும்பு)

**தீவிரவாதத்தில் ஈடுபட்டுள்ள இலங்கை நாட்டவர் எளிதில் கிடைக்கக்கூடிய இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தி வெடி பொருளை உருவாக்க திட்டமிடுவது தொடர்பில் பாகிஸ்தான் 2018 ஒகஸ்ட் 10 ஆம் திகதி இலங்கையை எச்சரித்துள்ளமை தற்போது வெளி வந்துள்ளது.**

உயிர்த் ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் இவ்விடயம் குறிப்பிடப் பட்டுள்ளது.

மேலும் அப்போதிருந்த இலங்கை அரசாங்கம் இந்த எச்சரிக்கை மீது கவனம் செலுத்தவில்லை என்றும் ஆணையம் குறிப்பிட்டது.

இது தொடர்பாக இஸ்லாமாபாத்தில் உள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயத்திடம் பாகிஸ்தான் அதிகாரிகள் விளக்கமளித்தனர்.

பாகிஸ்தான் அதிகாரிகள் குறித்த தீவிரவாதியின் படங்களுடன் அவர் பற்றிய தகவல்களையும் ஒப்படைத்தனர்.

சந்தேக நபரைப் பற்றிய தகவல்களில் ஆயுதப் பயிற்சி குறித்த கையேடு, குண்டு வெடிக்கும் திட்டங்கள், வாகனம் மூலம் குண்டு வெடிக்கும் திட்டங்கள் பற்றிய விபரங்கள் உள்ளன.

எனினும், கொழும்பில் உள்ள கிறிஸ்தவ வழிபாட்டுத் தலங்கள் மற்றும் மூன்று உயர்மட்ட ஹோட்டல்களை குறிவைத்து ஏப்ரல் 21 தாக்குதலுடன் இந்த நபரை நேரடியாக இணைக்க எந்த ஆதாரமும் இல்லை என்று ஆணையம் கூறுகிறது.

இதற்கிடையில், பயங்கரவாதத் தாக்குதல்கள் குறித்து இந்திய உளவுத்துறை அதிகாரிகள் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 4 ஆம் திகதி போதுமான மற்றும் விரிவான விபரங்களைத் தெரிவித்தனர்.

இருப்பினும், போதுமான தகவல்கள் கிடைத்த போதிலும் தாக்குதலைத் தடுக்க பாதுகாப்பு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என அறிக்கை குறிப்பிட்டுள்ளது. (நி-4)


## அறிவித்தல்
### கைதடி வீட்டுத்திட்ட நம்பிக்கை நிறுவகம்

கைதடி வீட்டுத்திட்ட நம்பிக்கை நிறுவகத்திற்கு உரித்தான A-9 வீதியிலுள்ள சிங்கமலைத்தோட்டம், மற்றும் A-32 வீதியில் உள்ள சவான்காட்டுத் தோட்டம் ஆகிய குடியிருப்புக்களில் வசிப்பவர்கள் (1974 ஆம் ஆண்டு உறுதி வைத்திருப்பவர்கள் உட்பட) எதிர்வரும் 10.04.2021 மாலை 5.00 மணிக்கு முன்னர் தமது காணிகளுக்கான உறுதியையும் அது சம்பந்தமான அனைத்து ஆவணங்களையும் 53-A சிங்கமலைத் தோட்டத்திலுள்ள நம்பிக்கையாளர் அலுவலகத்தில் சமர்ப்பித்து, தங்கள் உரிமத்துக்கான சட்டபூர்வ அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இல்லாவிடின், நிறுவகத்தின் யாப்பு விதிகளுக்கு அமைய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், நீங்கள் ஏற்கனவே ஏற்றுக்கொண்டதற்கமைய உங்கள் நிலம் நிறுவக யாப்பின் பிரகாரம் நிறுவகத்துக்கே சொந்தமாகும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

சட்டபூர்வமான அங்கத்துவ அடையாள அட்டையை பெறத்தவறும் எவரும் தங்களின் நிலம், வீடு சம்பந்தமான விடயங்களில் எமது நிறுவகத்துடன் தொடர்பு கொள்ள முடியாது என்பதனை இத்தால் அறியத்தருகின்றோம்.

(6392)

**செயலாளர்,**
**கைதடி வீட்டுத்திட்ட நம்பிக்கை நிறுவகம்**



## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 12 செவ் 2 சூரி 3 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L, வெளிநாடு பிரான்ஸ் நிரந்தர வதிவிடம்<br>எதிர்பார்ப்பு: உள்நாடும், வெளிநாடும்<br>தொ.இ: B/11684 | பிறப்பு: 1990 இந்து நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 28 1/2 செவ் 9 சூரி 11 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: B.A. அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/11783 |
| பிறப்பு: 1985 கிறிஸ்தவம்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: சட்டமாணி, தொழில்-அரச முகாமைத்துவ உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த அழகான பெண், உள்நாடு மட்டும்.<br>தொ.இ: B/11685 | பிறப்பு: 1989 இந்து நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 39 1/4 செவ் 11 சூரி 9 இல்<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு, அரச, தனியார் சொந்தத் தொழில், மணமகள் விவாகரத்து பெற்றவர், விவாகரத்தும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/11784 |
| பிறப்பு: 1985 இந்து நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 65 செவ் 1 சூரி 2 இல் உயரம்: 5' 1/2"<br>தகைமை/தொழில்: A/L, நகைக்கடை காசாளர்.<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண், உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/11686 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 45 செவ் 8 சூரி 9 இல் உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: படித்த மணமகன், உள்நாடு மட்டும்<br>தொ.இ: G/11786 |
| பிறப்பு: 1988 இந்து நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 53 1/2 செவ் 8 சூரி 10 இல்<br>உயரம்: 180cm<br>தகைமை/தொழில்: Hotel Manage Ment, நிர்வாக உத்தியோகத்தர் (நெதர்லாந்து வதிவிட விசா உண்டு)<br>எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு<br>தொ.இ: B/11687 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 35 செவ் 12 சூரி 4 இல்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்: CIMA, Work- tax Associate<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/11787 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**



## பதவி வெற்றிடம்

முல்லை .மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் பின்வரும் பதவிக்கு வெளிவாரியாக விண்ணப்பம் கோரப்படுகின்றது.

**பதவி - காசாளர்**
**சம்பள குறியீட்டு இலக்கம் - (306.13)**
**சம்பள அளவுத்திட்டம் - 16365-140 10-15 10**
**(04.2018 இன் படி) - 19265**

இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் வழங்கப்படும் ஏனைய படிகளும் வழங்கப்படும்.

### அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ. கூட்டுறவுப் பணியாளர் 14 வது சம்பளத்திட்டத்தில் காசாளர் பதவியொன்றில் 02 (இரண்டு) வருடங்களுக்கு குறையாத அனுபவம். 15 வது சம்பளத்திட்ட பதவியொன்றில் 04 (நான்கு) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

க.பொ.த சாதாரணம் கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 05 பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியும் கூட்டுறவுச் சங்கமொன்றின் எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு (2) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

### பொதுவானது

வயது எல்லை 18-45 இற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும் கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரியும் ஊழியருக்கு வயது எல்லை இல்லை.
சங்கத்தின் ஊடாகவே விண்ணப்பிக்க வேண்டும்.
விண்ணப்பதாரி முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.
சங்கத்தால் கோரப்படும் பிணையை செலுத்த தயாராக இருத்தல் வேண்டும்.

### விண்ணப்பங்கள் அனுப்புதல்

விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து பிறப்புச்சான்றிதழ், கல்வித்தகைமைச் சான்றிதழ், தொழில் தகைமைச் சான்றிதழ்,கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ், ஏனைய தகைமைகள் இருப்பின் அச்சான்றிதழ்களின் நிழற்பிரதிகள் என்பவற்றை 20.04.2021 இற்கு முன்னர் தலைவர் 10 ஆம் வட்டாரம் ஐயனார் கோயிலடி ஒட்டுசுட்டான் வீதி புதுக்குடியிருப்பு என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவி விண்ணப்பப் பெயர் குறிப்பிடப்பட வேண்டும். (C/1849)

**10ம் வட்டாரம்,**
**ஐயனார் கோவிலடி,**
**ஒட்டுசுட்டான் வீதி,**
**புதுக்குடியிருப்பு.**

**தலைவர்**
**முல்லை.மாவட்டம் ப.தெ.வ.அ.கூ.**
**சங்கங்களின் சமாசம்**
**021 390 0075, 077 046 5927**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதனவரி அலுவலகம் திறப்பு

(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச சபையில் ஆதனவரி அலுவலகம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் சின்மயாமிசன் சுவாமிகள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ந.பிரபாகரன், கிளிநொச்சி மக்கள் வங்கியின் முகாமையாளர் க.பிரதீப், சபையின் உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி சந்தைச்சேவா சங்கத்தின் தலைவர் மற்றும் செயலாளர் எனப்பலரும் கலந்து கொண்டனர். (5-4)




# சர்வதேசத்தின் முடிவு எமக்கு மிகுந்த வேதனையளிக்கிறது

(நெளுக்குளம்)

**இலங்கையிடம் நீதியை வழங்கும் பொறிமுறையை சர்வதேசம் வழங்கியிருப்பது மிகவும் வேதனையான விடயம் என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.**

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினால் வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக நேற்றையதினம் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதில் கலந்து கொண்டு விட்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள்,

எமது உறவுகளின் உண்மை நிலையை வலியுறுத்தி மூன்று வருடங்களிற்கும் மேலாக நாம் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். எனினும் எமக்கான நீதியினை எந்த ஒரு அரசாங்கமும் வழங்கவில்லை. எமது உறவுகளை தருமாறே நாம் போராட்டங்களை முன்னெடுக்கின்றோம். நாம் வேறு எதனையும் இந்த அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்க்கவில்லை.




எமக்கான நீதி ஒன்று கிடைக்கும் வரையில் நாம் இந்த போராட்டங்களை இடை நிறுத்தாமல் தொடர்ந்து முன் னெடுப்போம். சர்வதேச நீதியை நம்பியே நாம் போராடி வருகிறோம் எனினும், ஜெனிவா தீர்மானத்தில் இலங்கைக்கு எதிராக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டாலும், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளிற்கான நீதி தொடர்பாக எந்த பலன்களும் கிடைக்கவில்லை. குற்றம்செய்த குற்றவாளிகளிடம் நீதி கிடைக்கும் என்று நாம் எப்படி எதிர்பார்க்க முடியும். அந்தவகையில் இலங்கையிடம் நீதியை வழங்கும் பொறிமுறையை சர்வதேசம் வ்ழங்கியிருப்பது மிகவும் வேதனையான விடயமாகவே இருக்கிறது என மேலும் தெரிவித்தார். (5-4-250-299)

## கஞ்சாவுடன் கைதானவர் விளக்கமறியலில்

(கண்டாவளை)

கிளிநொச்சி பகுதியில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியல் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி பகுதியில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஒருவர் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற பதில் நீதவான் எஸ். சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த நபரை எதிர்வரும் 6ஆம் திகதி வரை விளக்கமறியல் வைக்குமாறு நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது. (5-4-315)

## ஒதியமலை கிராமத்தில் குடிநீருக்கு நெருக்கடி

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஒதியமலை கிராமத்தில் வாழ்கின்ற சுமார் எண்பது குடும்பங்கள் குடிநீர் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளன. கடந்த காலங்களில் இக்கிராமத்திற்குச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகளிடம் குடிநீர் நெருக்கடியினை தீர்த்து வையுங்கள் என இக்கிராம மக்கள் விடுத்த கோரிக்கையையடுத்து கடந்த ஆட்சிக் காலத்தில் இக்கிராமத்தில் குடிநீர்த் திட்டமொன்று தொடங்கப்பட்ட போதிலும் அது இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

கட்டுமானங்கள் உருவாக்கப்பட்ட போதிலும் நீர் விநியோகம் இடம்பெறவில்லை. தற்போது வரட்சிக் காலம் என்பதனால் ஒதியமலைக் கிராமத்தில் குடிநீருக்கான நெருக்கடி அதிகரித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் குடிநீர் நெருக்கடியினைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஒதியமலை மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-350)

## மணல் அகழ்வில் ஈடுபட்ட நால்வர் உழவு இயந்திரங்களுடன் கைது

(கண்டாவளை)

கிளிநொச்சி பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற நான்கு பேருக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.


கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் அகழ்விற்குப் பயன்படுத்திய நான்கு உழவு இயந்திரங்களுடன் 4 பேர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது பதில் நீதவான் எஸ்.சிவபாலசுப்பிரமணியம் தலா 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்ததுடன் மணலும் அரசுடைமையாக்கப்பட்டது. (5-4-315)




**மன்னாரில் அரசினால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டங்களின் மீதிக் கொடுப்பனவுகளை வழங்கக் கோரி மன்னாரில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு மகஜர் கையளிக்கும் வகையில் பிரதேச செயலகத்தில் கையளித்தனர்.**

## பால்சார் உற்பத்திப் பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேசத்திற்குட்பட்ட கரும்புள்ளியான் கிராமத்தில் அதிகளவான கால்நடை பண்ணையாளர் காணப்படுவதுடன் குறித்த பிரதேசத்தில் உற்பத்தி செய்கின்ற பாலை தனியார் நிறுவனங்களுக்கு குறைந்த விலைகளில் விற்பனை செய்யும் நிலையில் மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராம சக்தி திட்டத்தின் கீழ் உற்பத்திக் கிராமமாகிய கரும்புள்ளியான் கிராமத்தில் பால்சார் உற்பத்திப் பொருட்கள் தயாரித்தல் தொடர்பான பயிற்சி நெறி நடைபெற்றது.

இதற்கான இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு பாற்பொருட்கள் தயாரிப்பைக் கிராம சக்திக் குழுவினர் ஆரம்பித்துள்ளனர். (5-315)



வன்னித் தமிழ் மக்கள் ஒன்றியத்தின் பசுமைப்புரட்சி செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை கிளிநொச்சி-திருவையாறு மகா வித்தியாலய மாணவர்களுக்கு பயன்தரு மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன் இயற்கை சார் விழிப்புணர்வு கருத்தமர்வும் இடம்பெற்றது.

(படம்:-சுபேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

31.03.2021
பங்குனி 18, புதன்கிழமை
திருதியை முன்னிரவு 6.30 மணிவரை
சுவாதி பிற்பகல் 1.38 மணிவரை
சுபநேரம் 4.42-6.12 மணிவரை
இராகுகாலம் 12.12-1.42 மணிவரை
சந்திராஷ்டமம்:- உத்திரட்டாதி, ரேவதி
சங்கடஹர சதுர்த்தி விரதம்

வளவன்



**மேஷம்** எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், விருந்தினர் வருகையுண்டு.



**ரிஷபம்** பொதுவாழ்வில் கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், உடல் நலன் சீராகும், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், முயற்சிகளில் முன்னேற்றமுண்டு.



**மிதுனம்** பிள்ளைகளின் வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.



**கடகம்** நம்பிக்கைகள் நடைபெற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள், பெற்றோர் மீது பிரியம் கூடும், வாகன சுகமுண்டு, பயணங்களால் பலனுண்டு.



**சிம்மம்** நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், பணத் தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.



**கன்னி** உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.



**துலாம்** சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது.



**விருச்சிகம்** காரியங்களில் வெற்றி பெற கணபதியை வழிபட வேண்டிய நாள், உறவினர் வருகையுண்டு, ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், சஞ்சலங்கள் கூடும் நாள்.



**தனுசு** தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம்.



**மகரம்** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், செய்தொழில் மேன்மையுண்டு, புதிய முயற்சிகள் கைகூடும் வாய்ப்புண்டு, ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.



**கும்பம்** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தொழிலில் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும்.



**மீனம்** குடும்பத்தினரிடம் கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், வளர்ச்சி காண வழிபாட்டினை மேற்கொள்ள வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.

வினை விதைத்தவன் வினை அறுப்பான்.


# பிளாஸ்ரிக்-பொலித்தீன் பாவனைக்கு இன்றுமுதல் தடை-சுற்றுச்சூழல் அமைச்சு

(கொழும்பு)

**நான்கு வகையான பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பயன்படுத்தி தயாரிக்கப்படும் பொருட்களை இலங்கையில் தடை செய்வதற்கு சுற்றுச்சூழல் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.**

இன்று முதல் குறித்த பொருட்களை பயன்படுத்த தடை விதிக்கப்படுவதாக சுற்றுச்சூழல் அமைச்சு அறிக்கையொன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

இவ்வாறு தடை செய்யப்பட்டுள்ள பொருட்களில் ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்தக்கூடிய பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக்குகள், பிளாஸ்ரிக் போத்தல்கள், 20 மைக்ரோனுக்கு குறைவான லன்ஞ் பேப்பர்கள், சஷே பக்கட்டுகள் (உணவு அல்லாத மற்றும் மருந்து அல்லாதவை), கொட்டன் பட் மற்றும் ஊதப்பட்ட பிளாஸ்டிக் பொம்மைகள் ஆகியவை அவற்றில் உள்ளடங்குகின்றன.




பல நிறுவனங்கள் கோரியுள்ள கோரிக்கைகளை கருத்தில் கொண்டு, குறித்த பொருட்களினால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு மூன்று மாத கால அவகாசம் வழங்கப்படும் எனவும், அதுவரை குறித்த பொருட்கள் விற்பனை செய்வதற்கு எவ்வித தடையும் விதிக்கப்பட மாட்டாது எனவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (நி-4)

# ஒரு நாட்டின் ஜனாதிபதியை வாங்குவது தான் சீன நடைமுறை

## என்கிறார் நெதலகமுவே தேரர்

(கொழும்பு)

இலஞ்சம், மோசடிகள் மூலம் ஆட்சியாளர்கள் மற்றும் தொழில்சார் நிபுணர்களை வளைத்துப் போட்டு, வேறு நாடுகளை சுரண்டுவது சீனாவின் நடைமுறை என பேராசிரியர் நெதலகமுவே தம்மதின்ன தேரர் தெரிவித்துள்ளார்.



இது குறித்து மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

நாட்டின் ஜனாதிபதியை பணம் கொடுத்து வாங்கினால் அவருக்கு கீழே இருக்கும் நபர்கள் தானாகவே சீனாவின் பக்கம் சென்று விடுவார்கள். இதுதான் சீனாவின் நடைமுறை. நாட்டிற்கு அல்லது வெளி நாடுகளில் தரகு பணம் கொடுக்கப்படமாட்டாது என அமெரிக்காவின் அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ளது.

சீனாவிடம் 15 வீதம் தரகு பணத்தை கோரினால், அந்தத் தொகை அப்படியே வழங்கப்படும். அப்படியென்றால், சீனாவின் நடவடிக்கைகளை எண்ணிப்பாருங்கள் என பேராசிரியர் நெதலகமுவே தம்மதின்ன தேரர் குறிப்பிட்டார். (நி-4)

# ஜெனிவா விவகாரத்தினை தேசிய பிரச்சினையாக கருத வேண்டும்


## ஒன்றிணைந்து செயற்படுவோம் என்கிறார் பீரிஸ்

(கொழும்பு)

அனைத்து அரசியல் கட்சிகளும் ஜெனிவா விவகாரத்தினை தேசிய பிரச்சினையாக கருத வேண்டும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், குறித்த விடயத்தில் அனைத்து தரப்பினரும் அரசியல் நோக்கத்தினை விட்டுவிட்டு ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.



மேலும், தற்போதைய நெருக்கடி நிலையிலிருந்து விடுபட சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கோரிக்கை விடுத்துள்ளார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சத்தியமே வெல்லும்

அக்பருடைய சபையில் இருந்தவர்கள் அனைவரிலும், பீர்பால் மட்டுமே அக்பரின் பிரியத்திற்குப் பாத்திரமானவராக இருந்தார்.

இதனால் பீர்பால் மீது சபையில் பலர்பொறாமை கொண்டிருந்தனர்.

ஒருநாள், பீர்பால் மீது பொறாமை கொண்டவர்கள் ஒன்று கூடி அவருக்கு எதிராக சதி ஆலோசனை செய்தனர்.

அவருக்கு எப்படியாவது கெட்ட பெயரை உண்டாக்கிவிட வேண்டும் என்று அவர்கள் விரும்பினர்.


ஒவ்வொருவரும் ஒரு யோசனை கூற, தாவூத் என்பவர் பீர்பாலை அவமானப்படுத்த தன்னிடம் ஓர் அருமையான திட்டம் இருப்பதாகக் கூறினார்.

"பீர்பாலைப்பற்றி தவறாக எது சொன்னாலும் சக்கரவர்த்தி நம்பமாட்டாரே!" என்று மற்றவர்கள் சந்தேகம் எழுப்ப, "சொல்கிற விதத்தில் சொன்னால், சக்கரவர்த்தி கட்டாயம் நம்புவார்" என்று தாவூத் அடித்துக்கூறினார். உடனே மற்றவர்கள் தாவூதை உற்சாகப்படுத்தினர்.

"என் திட்டம் வெற்றி பெற வேண்டுமானால், நீங்கள் எனக்காக ஒரு காரியம் செய்ய வேண்டும்!" என்று தாவூத் கூற, "அது என்ன?" என்று மற்றவர்கள் கேட்டனர்.

"நாளைக்கு நீங்கள் அனைவரும் வழக்கப்படி குறித்த நேரத்தில் தர்பார் வந்து சேருங்கள்.

நான் மட்டும் தாமதமாக வருவேன். நான் ஏன் வரவில்லை என்று சக்கரவர்த்தி உங்களைக் கேட்பார். உடனே நீங்கள், "தாவூத் ஒரு பயங்கரமான குற்றத்தைத் தன் கண்களால் பார்த்து விட்டார்.



அது அவருடைய மனத்தை மிகவும் பாதித்து விட்டது. அதனால் அவர் தாமதமாக வருவார்" என்று சொல்லிவிடுங்கள். பிறகு நான் வந்து அது என்ன என்று அவரிடம் விளக்கிக் கூறுவேன்" என்று கூறினார் தாவூத்.

அனைவரும் அதற்கு சம்மதித்தபின் வீடு திரும்பினர். மறுநாள், தர்பார் கூடியது. பீர்பால் உட்பட அனைவரும் குறித்த நேரத்தில் தர்பாருக்கு வந்து விட்டனர்.

தாவூத் மட்டும் வரவில்லை. அக்பர் தர்பாரில் நுழைந்ததும் அனைவரும் எழுந்து சலாம் செய்தனர். அக்பரும் புன்னகைத்தபடி தன் ஆசனத்தில் அமர்ந்து கொண்டு அனைவர் மீதும், தன் பார்வையை செலுத்தினார்.

(தொடரும்)

# மகாபாரதம்




விஜயனும் மற்ற தம்பிகளும் இதுபோலவே உரைக்க, தம்பியரின் மனநிலையை உணர்ந்த தருமர் புன்னகையுடன் "முன்பு துரியோ தனன் செய்ததும் இன்று மூண்டிருக்கும் தீமையும் நாளை நடக்க இருப்பதும் நான் அறிவேன்.

சங்கிலித் தொடர் போல விதியின் வழியே இது. நம்மால் ஆவது ஒன்றுமில்லை. தந்தையின் கட்டளைப்படி இராமபிரான் காட்டுக்கு சென்றது போல நாமும் நம் தந்தையின் கட்டளைப்படி நடப்போம்" என்றார்.

**சூதாட்டம் தொடங்கியது**

தம்பிகள்கோபம்தணிந்து தருமரின் அறிவுரைப்படி அனைவரும் அஸ்தினாபுரம் அடைந்தனர். அஸ்தினாபுரத்தில் பாண்டவர்களைக் காண சந்திகள், வீதிகள் என எத்திசை நோக்கினும் மக்கள் சூழ்ந்தனர்.

அவர்கள்அரண்மனை அடைந்து திருதராட்டினனையும், பீஷ்மரையும், கிருபாச்சாரியாரையும், துரோணாச்சாரியாரையும் அவர் மகன் அசுவத்தாமனையும் கர்ணனையும், துரியோதனனையும் உள்ளன்போடு வாழ்த்தி வணங்கினர். மாயச் சகுனியை மகிழ்வுடன் தழுவினர். குந்தியும், திரௌபதியும் அனைவருடனும் அளவளாவினர்.

அவை கூடியது. அப்போது சகுனி தருமரை நோக்கி "தருமரே உமது குலப்பெருமையை உயர்த்தியுள்ளீர். இப்போது சூதாட்டத்தில் உங்கள் ஆற்றலைக் காண்போம்" என்றார்.

தருமரோ "சதி செய்து என்னை சூதுக்கு அழைத்தீர் இதில் பெருமையுண்டா..? அறம்உண்டா? வீரம் உண்டா? எங்கள் நல்வாழ்வை நீ விரும்பவில்லை என நான் அறிவேன். இச்சூதாட்டம் மூலம் எங்களை அழிக்க நினைக்கிறீர்" என்றார்.

உடன் சகுனி சிரித்தான். "உன்னை மாமன்னன் என்று அழைத்து விட்டேன். பண்டைய மன்னர்கள் சூதாடவில்லையா? அச்சம் கொள்ளாதே. நீ சூதாட்டத்தில் வெல்வாய். வெற்றி பெறுவது உன் இயல்பு வா ஆடுவோம்" என்றான்.

தருமர்பதிலுக்கு "சான்றோர் சூதாட்டத்தை விஷம் எனக் கண்டித்துள்ளனர். ஆதலின் இந்த சூதினை வேண்டேன் . என்னை வஞ்சித்து என் செல்வத்தைக் கொள்வோர் எனக்கு துன்பம் தருபவர் அல்லர், நான்கு வேதங்களையே அழித்தவராவர். பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன் வேண்டாம் சூது" என்றார்.

மன்னர் பலர் கூடியுள்ள இம்மாபெரும் சபையில் மறுத்து பேசுதல் அழகோ வல்லவனே வெல்வான் அல்லாதவன் தோற்றிடுவான். வருவதானால் வா மனத் துணிவில்லையெனில் செல்" என்றான் சகுனி.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24 மணிநேரத்தில் 4 ஆயிரத்திற்கும் மேல் தொற்றாளர்கள்

(பிரிட்டன்)

பிரிட்டனில் கொரோனா வைரஸ் (கொவிட்-19) பெருந் தொற்றினால், நேற்று முன் தினம் மட்டும், 4 ஆயிரத்து 654பேர் பாதி க்கப்பட்ட தோடு 23பேர் உயிரி ழந்து ள்ளனர்.

உலகளவில் கொவிட்-19 தொற்றினால் அதிக பாதிப் பினை எதிர்கொண்ட ஆறா வது நாடாக விளங்கும் பிரிட்டனில், இதுவரை 43 இலட்சத்து 37ஆயிரத்து 696 பேர் பாதிக்கப்பட் டுள் ளனர்.

ஒரு இலட்சத்து 26 ஆயி ரத்து 615 பேர் உயிரிழந் துள்ளனர். (நி-4-8)

# 200இற்கும் மேற்பட்ட சீனப்படகுகள் அத்துமீறி பிரவேசித்துள்ளது

## பிலிப்பைன்ஸ் குற்றச்சாட்டு



(பீஜிங்)

தென்சீனக்கடலின் 200 இற்கும் மேற்பட்ட சீனப் படகுகள் அத்துமீறி பிரவேசி த்ததோடு அவை பாறையொ ன்றின் அருகில் காணப்பட் டதாக பிலிப்பைன்ஸ் தெரி வித்துள்ளது.

அத்துடன், இந்தப் படகு களின் அத்துமீறிய பிரவேச மானது, தென்சீனக் கடலின் தமக்கான உரிமையையும், சர்வதேச கடற்போக்குவர த்து விதிகளையும் மீறியுள் ளதாகவும் பிலிப்பைன்ஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

இது குறித்து பிலிப்பை ன்ஸ் அதிகாரிகள் கூறுகை யில், பிலிப்பைன்ஸின் கட லோரப்பாதுகாப்பு படைகளின் காண்காணிப்பு தகவல்க ளின் பிரகாரம் 220 சீனா வின் படகுகள் தென்சீனக் கடலின் பிலிப்பைன்ஸ் எல் லைக்குள் பிரவேசித்துள் ளன.

இந்தப் படகுகள் மணிலா வினால் ஜூலியன் பெலிப்பெ ரீஃப் என்று அழைக்கும் விட்சன் ரீஃப் பகுதியில் காணப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளனர். (நி-4-8)

## பாகிஸ்தான் ஜனாதிபதிக்கு கொரோனா தொற்று

(இஸ்லாமாபாத்)

ஜனாதிபதி ஆரிப் ஆல் வியும் அவரது மனைவி சாமினா ஆல்வியும் சீனத் தயாரிப்பான சினோபார்ம் என்ற கொரோனாத் தடுப்பூ சியை மூன்று தினங்க ளுக்கு முன்பு எடுத்துள்ளார்.

இந்த நிலையில் தனக்கு கொரோனா உறுதியாகியு ள்ளதை ஜனாதிபதி ஆரிப் ஆல்வி தனது டுவிட்டர் பக்க த்தில் உறுதிப்படுத்தியுள் ளார். (நி-4)

## நாய்களுக்கும் குதிரைகளுக்கும் ஓய்வூதியம்-போலந்து அரசு முடிவு

(வார்ஷா)


பொலிஸில் பணிபுரியும் நாய்கள், குதிரைகளுக்கு ஓய்வூதியம் வழங்க போல ந்து அரசு திட்டமிட்டு வருகி றது.

போலந்து நாட்டில் பொலிஸ் நாய்கள் ஏராளமான சேவை களுக்கு பயன்படுத்தப்படுகி ன்றன.

இந்நிலையில், அரசு சேவையில் இருந்து வெளி யேறும் நாய், குதிரைக ளுக்கு ஓய்வூதியத் தொகை வழங்க புதிய சட்டம் கொண் டுவர போலந்து உள்துறை அமைச்சகம் முடிவு செய்து ள்ளது.

தற்போது போலந்தில் சுமார் 1,200 நாய்கள் மற் றும் 60 குதிரைகள் அரசு பணிகளில் சேவை செய்து வருகின்றன. (நி-4-8)

# 100 ஆண்டுகள் பழைமையான இந்துக்கோவில் சூறையாடல்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணம் ராவல்பிண்டி நகரில் 100 ஆண்டுகள் பழைமையான இந்து கோவில் ஒன்று உள்ளது.

கடந்த ஒரு மாதமாக இந்தக் கோவிலில் புனர மைப்பு பணிகள் நடந்து வருகின்றன.

இதனால் கோவிலில் உள்ள சுவாமி சிலைகள் வேறு இடத்துக்கு மாற்றப்பட்ட தோடு, தினசரி பூஜைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

இந்தநிலையில் கடந்த சனிக்கிழமை மாலை 15 பேர் கொண்ட கும்பல் ஒன்று 100 ஆண்டுகள் பழைமை யான இந்த இந்துக் கோவிலுக் குள் அத்துமீறி நுழைந்து கோவிலை சூறையாடியது.

கோவிலின் மேல் தளத் தில் உள்ள கடைகளை அடி த்து நொறுக்கிய மர்ம கும் பல், மாடிப் படிகளை இடித்து தள்ளினர் என்பது குறிப்பிடத் தக்கது. (நி-4-8)

## அறிவியல் சுற்றுவட்டப் பாதையில் நுழைந்தது 'ஹோப்' விண்கலம்



(டுபாய்)

அமீரகத்தின் 'ஹோப்' விண்கலம் வெற்றிகரமாக செவ்வாய் கிரகத்தின் அறி வியல்சுற்றுவட்டப்பாதையை அடைந்தது.

இதையடுத்து, அந்த விண்கலம் கிரகத்தில் நில அதிர்வு ஏற்பட்ட பகுதியை படம் பிடித்து அனுப்பியுள் ளது.

அமீரகத்தின் 'ஹோப்' விண்கலம் வெற்றிகரமாக 'சயின்ஸ் ஆர்பிட்' எனப்படும் அறிவியல் சுற்றுவட்டப் பாதையை அடைந்துள்ளது.

இதற்காக அந்த விண் கலத்தில் உள்ள 6 திரஸ்டர் என்ஜின்கள் 8.36 நிமிட ங்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் இயக்கப் பட்டது.

அடுத்த மாதம் (ஏப்ரல்) ஆம் திகதி முதல் பல்வேறு அறிவியல் ஆய்வுகளை 'ஹோப்' விண்கலம் தொட ங்க உள்ளது.

அறிவியல் சுற்றுவட்டப் பாதைக்குள் நுழைந்துள்ள 'ஹோப்' விண்கலம் செவ் வாய்க்கிரகத்தில் நில அதிர்வு ஏற்பட்ட 'செர்பெரஸ் போசே' என்ற பகுதியை மிக தெளிவாக படம் பிடித்து விண்வெளி கட்டுப்பாட்டு மையத்திற்கு அனுப்பியு ள்ளது என ஓமரான் ஷரப் தெரிவித்தார். (நி-4-8)

## 76 ஆண்டுகளில் இல்லாத வெப்பம் பதிவானது

(டில்லி)

அனல் வீசும் கோடை காலம் இன்னும் தொடங்க வில்லை. இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் பிறப்பதற்கு முன்பே டில்லியில் வெயில் கொளுத்தி வருகிறது.

நேற்று முன்தினம் தலைநகர் டில்லியில் சப்தர் ஜங் பகுதியில் உள்ள இந் திய வானிலை ஆராய்ச்சி மையம், வெயில் அளவை வெளியிட்டது. அது அதிர் ச்சியளிக்கும் வகையில் அமைந்திருந்தது.

76 ஆண்டுகளில் மார்ச் மாதத்தில் டில்லியில் இவ் வளவு அதிகமான வெயில் பதிவானது இதுவே முதல் முறை" என இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது. (நி-4-8)

## சிக்கி நின்ற கப்பல்கள் 3-4 நாட்களில் கடக்கும்

(கெய்ரோ)

சூயஸ் கால்வாயில் சிக்கி யிருந்த எவர்கிரீன் கப்பல், பயணப் பாதைக்கு திரும் பியதையடுத்து ஒரு வார காலமாக போக வழியின்றி சிக்கி நின்ற கப்பல்கள் 3 அல்லது 4 நாட்களில் சூயஸ் கால்வாயை கடந்து செல் லும் என சூயஸ் கால்வாய் ஆணையத்தின் தலைவர் ஒசாமா ராபி தெரிவித்தார்.

அத்துடன் ஒரு வார கால மாக போக வழியின்றி சுமார் 422 கப்பல்கள் சிக்கியிருந் ததாக அவர் தெரிவித்தார்.

இதுதவிர நேற்று செவ் வாய்க்கிழமை காலை சூயஸ் கால்வாய் வழியாக 113 கப்பல் கள் கடந்து சென்றன. (நு-4-8)

## போராட்டத்தை ஒடுக்கவே துப்பாக்கிச்சூடு இதுவரை 510 பேர் பலி

(மியன்மார்)

மியன்மாரில் பொதுமக்கள், போராட்டக்காரர்கள் என 510 பேரை இராணுவம் கொன்றுள் ளதாக தகவல் வெளியாகி இரு க்கின்றன.

இராணுவத்தின் எச்சரிக் கையையும் மீறி போராட்டம் தொடர்ந்து நீடித்து வருகிறது. இதனால் போராட்டத்தை ஒடுக்க இராணுவம் துப்பாக்கிச்சூடு நடத்துகிறது.

கடந்த 27ஆம் திகதி மியன் மார் இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் ஒரே நாளில் 114 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த நிலையில் மியன் மாரில் இதுவரை பொதுமக்கள், போராட்டக்காரர்கள் என 510 பேரை இராணுவம் கொன்றுள் ளதாக தகவல் வெளியாகி இரு க்கிறது.

இந்த நிலையில் மியன்மா ருடன் அனைத்து வர்த்தக உறவுகளையும் நிறுத்தி கொள் வதாக அமெரிக்கா அறிவித்துள் ளது.

புதிய அரசு தேர்ந்தெடுக்க ப்படும் வரை இந்த தடை தொட ரும் என்று அமெரிக்க வர்த்தக பிரதிநிதி காத்தரீன் தெரிவி த்தார். (நி-4-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேங்காய் எண்ணெய் தொடர்பான சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார் பந்துல

(கொழும்பு)

**புற்றுநோயை ஏற்படுத்தும் இரசாயனம் அடங்கிய தேங்காய் எண்ணெய் சந்தைக்கு விநியோகிக்கப் படவில்லை என்பதை அரசாங்கம் உறுதி செய்துள்ளது.**

நான்கு இறக்குமதி நிறுவனங்களால் நாட்டுக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ள தேங்காய் எண்ணெயில் எப்லடோக்ஸின் என்ற புற்றுநோயை ஏற்படுத்தும் இரசாயனம் கலந்துள்ளதை தர நிர்ணய நிறுவனம் உறுதிசெய்துள்ள நிலையில் அவற்றை சந்தைக்கு விநியோகிக்கவில்லை என்றும் இறக்குமதி செய்யப்பட்ட நாட்டுக்கே அதனை திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன நேற்று முன்தினம் தெரிவித்தார்.

மேற்படி சர்ச்சைக்குரிய தேங்காயெண்ணெய் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் மற்றும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் வர்த்தக அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது சுங்கம், நுகர்வோர் அதிகார சபை, தர நிர்ணய நிறுவனம் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களின் முக்கியஸ்தர்களையும் அழைத்து அமைச்சர் அது தொடர்பில் உண்மை நிலையை ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தினார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர் பந்துல குணவர்த்தன;

மேற்படி புற்றுநோயை ஏற்படுத்தும் இரசாயனம் கலந்த தேங்காய் எண்ணெய் இது போன்ற பண்டிகைக் காலத்தில் நாடளாவிய ரீதியில் விற்பனைக்காக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சியினர் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றனர்.

நுகர்வோர் அதிகாரசபை, சுகாதார அமைச்சின் உணவுப் பொருட்கள் பாதுகாப்புப் பிரிவு மற்றும் தர நிர்ணய நிறுவனம் உள்ளிட்ட நிறுவனங்கள் அது தொடர்பில் பரிசோதனைகளை மேற்கொண்டுள்ள நிலையில் குறித்த தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்த நாட்டுக்கு மீள் ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பல்வேறு பொருட்கள் தனியார் துறை நிறுவனங்கள் மூலமே இறக்குமதி செய்யப்படுகின்றன.

தேங்காய் எண்ணெய் மட்டுமன்றி பால்மா, பருப்பு, ரின்மீன் உட்பட பல்வேறு இறக்குமதிப் பொருட்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

இம்முறை தேங்காய் எண்ணெயில் மேற்படி இரசாயனம் கலந்துள்ளமை தொடர்பில் இனம் காணப்பட்டுள்ள நிலையில் இனிமேல் இறக்குமதி செய்யப்படும் அனைத்துப் பொருட்களின் மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் விசேட பரிசோதனைக்கான பிரிவு மேற்படி தேங்காய் எண்ணெயில் புற்றுநோயை ஏற்படுத்தும் இரசாயனம் கலந்துள்ளதாக தெரிவித்துள்ளது.

அதனையடுத்து தர நிர்ணய நிறுவனமானது அதனை சுங்கத் திணைக்களத்திடம் தெரிவித்துள்ளதுடன் மேற்படி தேங்காய் எண்ணெயை மீள் ஏற்றுமதி செய்யுமாறும் குறிப்பிட்டுள்ளது.

அதற்கிணங்க மேற்படி தேங்காய் எண்ணெய் விற்பனைக்காக சந்தைக்கு விடப்படவில்லை என்பதுடன் ஏற்றுமதி செய்வதற்கு தீர்மானிக்கப்படடுள்ளது என பந்துல தெரிவித்தார். (நி-4)



# உயிராபத்து ஏற்பட்டுள்ளது பாதுகாப்பை பலப்படுத்துங்கள் முன்னாள் ஜனாதிபதி கோரிக்கை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது உயிருக்கு ஆபத்து இருப்பதாகவும் தனது பாதுகாப்பை பலப்படுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரட்னவிற்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"அண்மையில் சிலர் ஹொரகொல்லாவில் உள்ள தனது வீட்டிற்குள் நுழைந்து எவ்வாறு ஆய்வு செய்தார்கள் என்பதையும் அவர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கிருந்த பொருட்கள் எதையும் அகற்றாமல் அப்படியே சென்றிருந்தனர். எனவே இது ஒரு கொள்ளை முயற்சியாக இருக்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தனது முறைப்பாட்டிற்கு அமைய பொலிஸ் குழுக்கள் சம்பவ இடத்திற்கு விரைந்தன என்றும், எனினும் விசாரணைகளைத் தொடர்ந்து எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை எனவும் கவலை வெளியிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் ஒரு அசம்பாவிதச் செயலுக்கான ஒத்திகையாக இது கருதப்படலாம் என்று அவர் அச்சம் வெளியிட்டுள்ளார். (நி-4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2269

Search for people, places and things

**உமா**




**ரஜீதன்**




**சுஜாதா**




**விபுலன்**




**கஜிதா**




**நுதன்**





நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவற்றை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி என்ற போர்வையில் பிரதேச வளங்கள் அபகரிக்கப்படுகிறது

## சாணக்கியன் குற்றச்சாட்டு



(கொழும்பு)

எங்களுக்குள்ளேயே சிலரை வைத்து பிரச்சினைகளை வளர்த்துவிட்டு அதில் தாங்கள் பலனடைவதற்குப் பலர் முயற்சிக்கின்றார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி என்ற போர்வையில் பல பிரதேசங்களின் வளங்கள் அபரிக்கப்படுகின்றன. வடக்கு- கிழக்கு மக்களை ஏமாற்றி கடந்த காலத்திலே வாக்குகள் பெற்றெடுத்த ஆளும் தரப்பு அரசியல் பிரமுகர்கள் யாரும் இவை தொடர்பில் குரல் கொடுத்ததாகத் தெரியவில்லை என திருக்கோவிலில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

அபிவிருத்தி என்ற போர்வையில் எமது பல பிரதேசங்களின் வளங்கள் அபரிக்கப்படுகின்றன. இது எமது அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறுகின்றது. அம்பாறை மாவட்டத்திலும் இல்மனைட் பிரச்சினை பாரிய பிரச்சினையாக இருக்கின்றது.

எமது வடக்கு- கிழக்கு மக்களை ஏமாற்றி கடந்த காலத்திலே வாக்குகள் பெற்றெடுத்த ஆளுந்தரப்பு அரசியல் பிரமுகர்கள் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவர்களோ, தெரிவு செய்யப்படாதவர்களோ யாரும் இவை தொடர்பில் குரல்கொடுத்ததாகத் தெரியவில்லை என சாணக்கியன் தெரிவித்தார். (நி-4)

# 27 ஆயிரம் லீற்றர் தேங்காய் எண்ணெய் ஏற்றிவந்த இரு பவுசர்கள் பறிமுதல்

(கொழும்பு)

தங்கொட்டுவ பகுதியில் நச்சு இரசாயன பதார்த்தம் அடங்கியுள்ளதாக சந்தேகிக்கப்படும் 27 ஆயிரத்து 500 லீற்றர் தேங்காய் எண்ணெய் கொண்ட இரு பவுசர்களை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

119 என்ற அவசர எண்ணுக்கு வந்த அழைப்புக்கு இணங்க பொலிஸார் முன்னெடுத்த விரைவான நடவடிக்கையின் போதே இந்தப் பறிமுதல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது இரு வாகனங்களின் சாரதிகளையும் பொலிஸார் கைதுசெய்தனர்.

சந்தேக நபர்கள் 25 ஆம் திகதி ராகமையில் உள்ள ஒரு கிடங்கிலிருந்து இந்த தேங்காய் எண்ணெயை இரு பவுசர்களினூடாக கொண்டு வந்திருந்ததுடன், தங்கொட்டுவ பகுதியில் அமைந்துள்ள ஆலையில் வைத்து குறித்த எண்ணெய் பவுசர்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் பறிமுதல் செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய்களின் மாதிரிகளை ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-4)

# ஐ.நாவில் ஆதரவு தெரிவித்த சீனா நன்றி தெரிவித்த இலங்கை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்த சீனாவுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நன்றி தெரிவித்துள்ளார்.

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தொலைபேசி உரையாடல் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போதே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 46 ஆவது கூட்டத் தொடரில் சிறப்பான ஆதரவை இலங்கைக்கு வழங்கியமைக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துள்ளார்.



இதன்போது இருநாடுகளின் நல்லுறவை மேம்படுத்தல், பொருளாதாரம், அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.

இதேவேளை இலங்கைக்கு தேவையான உதவிகளை சீனா தொடர்ந்து வழங்கும் என சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் உறுதியளித்துள்ளார்.

இதனிடையே இலங்கையில் சீனாவினால் முன்னெடுக்கப்படுகின்ற அம்பாந்தோட்டை துறைமுகம், ஏனைய உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் மிகவும் திருப்தியளிப்பதாகவும் விரைவாக அதனை நிறைவு செய்யுமாறும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இதன்போது கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 100வது ஸ்தாபக வருட விழாவுக்கு சீனாவுக்கு ஜனாதிபதி வாழ்த்தும் தெரிவித்துள்ளார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சுவர்க்கமும் நரகமும்!

ஒரு கோயிலில் ஆன்மீக சொற்பொழிவு நடந்து கொண்டிருக்கிறது. ஒரு பெரியவர் பேசிக் கொண்டிருக்கின்றார். கடவுளைப் பற்றியும் சுவர்க்கத்தைப் பற்றியும் மனிதனைப் பற்றியும் அவர் விபரமாக பேசுகின்றார். எல்லோரும் உட்கார்ந்து கேட்கின்றார்கள். அந்தக் கூட்டத்தில் ஒரு தத்துவ ஞானியும் உட்கார்ந்திருந்தார். அவர் அவருடைய நண்பர்.

பேசி முடித்ததும் அந்தப் பெரியவர் மேடையை விட்டு இறங்கினார். நேராக அந்த தத்துவ ஞானியிடம் வந்தார்.எப்படி இருந்தது என் பேச்சு? என்று கேட்டார். நீங்கள் பேசியது ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருந்தது என்றார் இவர்.

நான் என்ன அப்படி தவறாக பேசிவிட்டேன்? என்றார் அவர். கடவுளை நம்புகின்றவர் சுவர்க்கத்துக்குப் போவான் என்று சொன்னீர்கள். பின்பு நல்லவிதமாக வாழுகின்றவன் சுவர்க்கத்துக்குப் போவான் என்று சொன்னீர்கள் என்றார்.இதிலே என்ன முரண்பாடு என்றார் அவர். இங்கே ஒருத்தன் எல்லா தவறும் செய்து கொண்டு கடவுளை நம்பினார் என்றால் அவன் சுவர்க்கத்திற்குப் போவானா? அல்லது ஒருத்தன் ஒரு தவறும் செய்யாமல் ஒழுங்காக வாழ்ந்து கொண்டு.. கடவுளை நம்பாமல் இருக்கின்றான். அவன் என்ன நரகத்திற்குப் போய்விடுவானா? கடவுள் நம்பிக்கையுள்ள ஒரு திருடன் என்ன ஆவான்? எங்கே போவான்?

கடவுள் நம்பிக்கையே இல்லாத ஒரு நல்லவன் என்ன ஆவான்? எங்கே போவான்? ஒருத்தன் இங்கே கடவுள் நம்பிக்கையோடு வாழுவது முக்கியமா? நல்லவனாக வாழுவது முக்கியமா?இதைக் கேட்டதும் அந்தப் பெரியவர் குழம்பிப் போய்விட்டார். அவர் சொன்னதும் நியாயம் தானே.கடவுளை நம்புகிறவன் தான் சுவர்க்கத்திற்குப் போவான் என்றால் பேசாமல் கடவுளை நம்பிக் கொண்டு இந்த உலகத்திலே எல்லா தவறும் செய்து கொண்டு இருந்து விடலாமே.

பேச்சாளர் குழப்பத்தோடு வீட்டுக்குப் போனார். படுத்துத் தூங்கினார். ஒரு கனவு வந்தது. கனவிலே அவர் ஒரு ரயிலில் வேகமாக போய்க் கொண்டிருக்கின்றார்.எதிரிலே உட்கார்ந்திருக்கிறவரைப் பார்த்து நாம் இப்பொழுது எங்கே போகின்றோம் என்றார்.

சுவர்க்கத்திற்குப் போய் கொண்டிருக்கின்றோம் என்றார் அவர். ரயில் போய் நின்றது. இவர் இறங்கினார். இங்கே கவுதம புத்தர் இருப்பார். சாக்ரட்டீஸ் இருப்பார்.அவர்களைப் பார்ப்பதற்கு ஒரு நல்ல வாய்ப்பு என்று நினைத்துக் கொண்டே அங்கேயம் இங்கேயும் பார்த்தார். அங்கே யாருமே இல்லை. ஒரே பாலைவனம் மாதிரி இருந்தது.பச்சை இல்லை-பசுமை இல்லை-பூக்கள் இல்லை. மரமெல்லாம் மொட்டையாக நின்று கொண்டிருந்தது. எலும்பும் தோலுமாக சில முனிவர்கள் அங்கேயும் இங்கேயும் உட்கார்ந்தி ருக்கின்றார்கள்.இவர் அவர்களிடம் போய் புத்தர், சாக்ரட்டீஸ் இவர்கள் எல்லாம் எங்கே இருக்கின்றார்கள் என்று கேட்டார். அப்படி யாரும் இங்கே இல்லையே அவர்கள் எல்லாம் யார்? என்று திருப்பிக் கேட்டார்கள்.

இவருக்கு அதிர்ச்சி. அப்படி என்றால் அவர்கள் எங்கே போயிரு ப்பார்கள்? நரகத்திற்கு ஒரு ரயில் புறப்பட்டுக் கொண்டிருந்தது. அதிலே ஏறி உட்கார்ந்தார். ரயில் வேகமாக போய்விட்டது. நரகம் நெருங்க நெருங்க.. காற்று குளிர்ச்சியாக வீசியது. வெளியே பசுமை கண்ணிலே பட்டது. அங்கே அழகான நீர் நிலைகள் நந்தவனங்கள். மலர்கள் கூட்டம். அங்கே இருந்தவர்களும் மகிழ்ச்சியாக உல்லாசமாக இருந்தார்கள். எங்கே பார்த்தாலும் ஆடல் பாடல் – உற்சாகம் இவர் ரயிலை விட்டு இறங்கினார் அவருக்கு சந்தேகம்.

இதுவா நரகம் என்று விசாரித்தார்.ஆமாம் என்றார்கள். எனக்கு ஒரு சந்கேம்? என்றார். என்ன? என்று கேட்டார்கள்.கவுதம புத்தரும் சாக்ரட்டீசும் லாவோசுவும் சுவாங்சும்.. இவர்களை மாதிரி இன்னும் பல பேரும் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள். அவர்கள் எல்லாம் இங்கே இருக்கின்றார்களா? என்பது தான் என் சந்தேகம் என்றார்.

இப்பொழுது அவர்கள். இங்கே நீங்கள் பார்க்கின்றீர்களே பசுமையும் பச்சைப் பயிர்களும் ஆடல் பாடல்களும், அழகிய மலர்களும் .. இது எல்லாமே கவுதம புத்தரும் சாக்ரட்டீசும் லாவோசும் ஏனைய மகான்களும் இங்கே வர ஆரம்பித்த பிறகு தான் உண்டாக ஆரம்பித்தது. இந்தப் பிரதேசத்தையே அவர்கள் மாற்றிவிட்டார்கள். இப்பொழுதெல்லாம் இங்கே இருக்கின்றவர்கள். யாரும் சுவர்க்கத்திற்குப் போகவே விரும்புவதில்லை என்றார்களாம்.இந்த அதிர்ச்சியில் அந்தப் பெரியவர் கனவு கலைந்து முழித்துக் கொண்டாராம். இதிலே இருக்கின்ற கருத்து என்ன என்றால் நல்லவர்கள் எங்கே இருக்கின்றார்களோ அந்த இடத்திற்குப் பேர் தான் சுவர்க்கம்.

சுவர்க்கம் –நரகம் என்பதெல்லாம் ஆன்மிகப் பண்புகள் அவ்வளவு தான்.ஒரு ஊரிலே இரண்டு இணைபிரியாத நண்பர்கள். ஒருத்தன் கேட்டான். இப்பொழுது கடவுள் எங்கள் முன்னால் வந்து உங்கள் இரண்டு பேரிலே யாராவது ஒருத்தர் மட்டும்என்னோடு சுவர்க்கத்திற்கு வரலாம் என்று கூப்பிட்டால் நீ என்ன சொல்லுவாய்? என்றான்.

உன்னையே அழைத்துக் கொண்டு போகச் சொல்லுவேன் என்றான் இவன்.அப்படி என்றால் உனக்கு சுவர்க்கம் வேண்டாமா? என்றான் அவன்.நீ என்னை விட்டுப் பிரிந்து போய்விட்டாய் என்றால் பின்பு இந்த பூலோகமே எனக்கு சுவர்க்கம் தானே என்றான் இவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டெழுந்த யாழ்ப்பாண பொதுசன நூலகம்

## 01 நூல்களிலிருந்து அதன் வரலாற்றுத் தேடல்



திருமதி.சுகந்தினி சதாசிவமூர்த்தி பிரதம நூலகர், யாழ்ப்பாணம் பொது நூலகம்
கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

85 வருடத்திற்கும் மேற்பட்ட வரலாற்றுப் பெருமை கொண்டது யாழ்ப்பாணத்தில் உள்ள பொது நூலகம். தெற்கு ஆசியப் பகுதியில் அமைந்துள்ள மிகச் சிறந்த நூலகங்களில் ஒன்றான இந்த நூலகம் பாரம்பரிய கலாசாரம், கல்வி மற்றும் சமயத்தின் அடையாளமாக திகழ்ந்து வருகிறது. யாழ்ப்பாண மக்களின் பாரம்பரியம் மற்றும் கல்வி குறித்து பேசும் போதோ அல்லது எழுதும் போதோ அறிவின் பொக்கிஷமாக திகழும் இந்த நூலகத்தை தொட்டு செல்லாமல் சென்று விடமுடியாது.

**யாழ். பொது நூலகத்தின் வளர்ச்சிப்பாதை படிப்படியாக தோற்றம் பெற்றது. எத்தனையோ பேரின் முயற்சியின் பலனாக உருவாக்கப்பட்டது. எத்தனையோ இடர்பாடுகள், நெருக்கடிகளுக்கு மத்தியில் வளர்க்கப்பட்டது.**


யாழ்ப்பாணத்தில் தமிழர்களின் நூலகமாக இயங்கிவந்த இந்த நூலகத்தில் அபூர்வமான தமிழ் நூல்களும், ஓலைச் சுவடிகளும் பாதுகாக்கப்பட்டு வந்தன. இவை தவிர உலகம் முழுவதிலும் இருந்து சேகரிக்கப்பட்ட மிகச்சிறந்த நூல்களும் இங்கு இருந்தன. சுமார் 97 ஆயிரம் நூல்கள் இருந்த இந்த நூலகம் 1981 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட கலவரத்தின் காரணமாக தீவைத்து எரிக்கப்பட்டது. நூலகத்தில் இருந்த 97 ஆயிரம் நூல்களும் எரிந்து போன நிலையில் நூலக கட்டடமும் சேதமடைந்தது.

எரிந்து போன நூல்களில் கிடைப்பதற்கு அரிதான ஐசாக் தம்பையா நன்கொடை கொடுத்த இலக்கியம், சமயம், மொழியியல் தத்துவம் தொடர்பான சுமார் 6000 நூல்களும், இந்திய வர்த்தகர் ஒருவரால் கொடுக்கப்பட்ட மகாத்மா காந்தியின் சத்திய சோதனை, 1672 ஆம் ஆண்டில் பிலிப்பஸ் பால்டியார் என்பவர் எழுதிய டச்சு ஆட்சியில் இலங்கை என்னும் நூல், 1660ஆம் ஆண்டில் கண்டி மன்னரால்சிறை பிடிக்கப்பட்ட வேளை றொபேட் நொக்ஸ் என்பவர் எழுதிய இலங்கையராவார் என்னும் நூல் ஆகியவை அழிந்தன.

1585 ஆம் ஆண்டில் கத்தோலிக்க மதத் தலைவர்களால் தமிழில் எழுதப்பட்ட நூல், சேர்.பொன்னம்பலம் இராமநாதன் எழுதிய பகவத் கீதை விளக்கம், சித்தாந்தம், செந்தமிழ் இலக்கிய நூல்கள், திருமதி இராமநாதன் அம்மையார் எழுதிய இராமாயண மொழிபெயர்ப்பு, மகாகவி பாரதியாரின் நண்பரான நெல்லையப்பன் எழுதிய நூல்கள், கடலைகுடி நடேச சாஸ்திரியார் எழுதிய சோதிட சாஸ்திர நூல்கள், வானசாஸ்திரம் சம்பந்தமான நூல்கள், சித்த வைத்திய வாசகங்கள் அடங்கலான ஏட்டுச் சுவடிகள் ஆகியவை அழிந்தன.

மேலும், முத்துத்தம்பிப்பிள்ளை எழுதிய அபிதான கோசம், சிங்காரவேலு முதலியார் எழுதிய அபிதான சிந்தாமணி, முதலியார் இராசநாயகம் எழுதிய புராதன யாழ்ப்பாணம், சுவாமி ஞானப்பிரகாசம், முத்துத்தம்பிப்பிள்ளை எழுதிய யாழ்ப்பாணம் பற்றிய நூல்கள், கல்லடி வேலன் என்று அழைக்கப்பெற்ற கே.வேலுப்பிள்ளை இயற்றிய யாழ்ப்பாண வைபவ கௌமுகி, சிற்பக்கலை பற்றிய நூல்கள், தனிநாயக அடிகளார் பதிப்பித்து வெளியிடப்பட்ட "தமிழ்க்கலாசாரம்" எனும் ஆங்கில சஞ்சிகை, இராசையனார், வன்னியசிங்கம், கதிரவேற்பிள்ளை, ஆனந்தகுமாரசாமி மற்றும் முதலியார்குல சபாநாதன் சேகரித்த நூல்கள் மற்றும் 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட கையெழுத்துப் பிரதிகளும் அழிவடைந்தன:

எரிக்கப்பட்ட யாழ் பொது நூலகம்



மீண்டும் அந்த நூலகத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்று முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக பல இடங்களில் நிதி சேகரிக்கப்பட்டன. எரிக்கப்பட்ட நூலகத்தின் முன்பகுதியை நினைவுச் சின்னமாக பேணிக் கொண்டு நூலகத்தின் மேற்குப் பகுதி புதிதாக நிர்மாணித்து 1984 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4 ஆம் திகதி பல்வேறு அச்சுறுத்தலுக்கு மத்தியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நூலகப் பகுதி திறந்து வைக்கப்பட்டது.

இதன் பின்னர் யுத்தம் காரணமாக நூலகம் மீண்டும் சிதைக்கப்பட்டது. சிதைக்கப்பட்ட நூலகத்தினை புனரமைப்புச் செய்வதற்கு அதன் பின் வந்த அரசாங்கங்கள் முனைப்புக் காட்டியிருந்தன. இதனால் நூலக எரிப்பினை நினைவுகூரும் வகையில் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த நூலகத்தின் முன்பகுதி முழுமையாக புனரமைக்கப்பட்டு, நூலக எரிப்பின் சான்றும் அரசாங்கத்தால் திட்டமிட்டு இல்லாமல் செய்யப்பட்டுவிட்டது. புதுப்பிக்கப்பட்ட பின்னர் நவீனத்துவத்துடன் தற்போது இயங்கி வருகின்றது. குறிப்பாக கணனி உட்பட பல்வேறு வசதி வாய்ப்புக்கள் அங்கு உள்ளன. இருந்த போதும் நாங்கள் இழந்த தமிழ் மக்களின் ஓலைச் சுவடிகள் உட்பட பல பொக்கிஷங்களை மீண்டும் பெற்றுக் கொள்ள முடியாத நிலையே உள்ளது.

1981 ஆம் ஆண்டுக்கு முன் இந் நூலகம் பற்றி கட்டுரைகள் மட்டுமே வந்திருந்தன. உதாரணமாக எழில் மிகு யாழ்ப்பாணம் குடிநல-சுகாதார வாரமலர், யாழ்ப்பாண மாநகர சபை வெள்ளி விழா மலர் போன்றவற்றில் வந்த கட்டுரைகளைக் குறிப்பிடலாம்.

1981ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1 ஆம் திகதி நூலகத்திற்கு வைக்கப்பட்ட தீயின் பின்னரேயே இந் நூலகம் பற்றி பல புத்தகங்களும், கட்டுரைகளும், கவிதைகளும் மற்றும் ஆவணப்படங்களும் வெளிவந்தன. வெளிவந்து கொண்டிருக்கின்றன.

**1981ம் ஆண்டுக்கு முன் யாழ்ப்பாண பொது நூலகம் பற்றி ஒரு சில கட்டுரைகள் மட்டுமே வந்திருந்தன. 1981ம் ஆண்டு ஜூன் மாதம் 1ஆம் திகதி நூலகத்திற்கு வைக்கப்பட்ட தீயின் பின்னரேயே இந் நூலகம் பற்றி பல புத்தகங்களும், கட்டுரைகளும், கவிதைகளும் மற்றும் ஆவணப்படங்களும் வெளிவந்தன. வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவ்வாறு வெளியிடப்படும் சில நூல்களில் தீயில் எரிந்த திகதியை கூட சரியான முறையில் ஆவணப்படுத்தாது யாழ். பொது நூலக எரிப்பு மே மாதம் 31 ஆம் திகதி பின்னிரவில் நடைபெற்றதாக தெரிவிக்கின்றமையையும் காணமுடிகிறது.**

1981க்குப் பின், எமக்குத் தெரிந்த வரையில்,

- 1981 இல் வெளிவந்த "மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது",
- 1984இல் வெளிவந்த யாழ்ப்பாண பொது நூலகம் மீள்விக்கப் பெற்ற கட்டடத் திறப்பு விழா மலர்,
- யாழ். மாநகர சபை பொன் விழா மலர் (2002) என்பவற்றை விட
- 1997ஆம் ஆண்டில் மூதறிஞர் க.சி.குலரத்தினம் வெளியிட்ட "யாழ்ப்பாண நூல் நிலையம் - ஓர் ஆவணம்" என்னும் நூலும்,
- 2001 இல் என். செல்வ ராஜா என்பவர் இலண்டனிலிருந்து வெளியிட்ட "யாழ்ப்பாணப் பொது நூலகம் - ஒரு வரலாற்றுத் தொகுப்பு" என்னும் நூலும்,
- 2009 இல் அவுஸ்திரேலியாவிலிருந்து வி.எஸ். துரை ராஜா என்பவர் வெளியிட்ட "யாழ்ப்பாணப் பொதுசன நூலகம் அதன் சாம்பலிலிருந்து எழுகின்றது" என்னும் நூலும்,
- 2015 ஆம் ஆண்டில் தங்க முகுந்தன் என்பவர் வெளியிட்ட "யாழ்ப்பாணப் பொதுசன நூலகம்- உண்மை நிகழ்வுகளின் தொகுப்பு" என்னும் நூலும்
- 2014இல் என். செல்வ ராஜா வெளியிட்ட "தீ தின்ற தமிழர் தேட்டம்" என்ற இன்னுமொரு நூலும், யாழ்ப்பாணப் பொது நூல் நிலையம் பற்றிய பல தகவல்களை வெளியிட்டுள்ளன.
- இதைவிட நூலகம் எரிவுற்ற காலத்தில் நூலகத்தின் நூலகராக இருந்த திருமதி. ரூபவதி நடராஜா "யாழ்ப்பாணப் பொது நூலகம் - அன்றும் இன்றும்" என்னும் நூலை 2019இல் வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு வெளியிடப்பட்ட தகவல்களில் நூல்களுக்கிடையே சில சிறிய முரண்பாடுகளும் காணப்படுகின்றன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்த முறையிலாவது மாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்துங்கள்

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலை கூடிய விரைவில் நடத்துமாறும் அது எந்த முறையாக இருந்தாலும் தேர்தலை சந்திக்க நாம் தயாராகவே இருக்கிறோம் என ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் மாகாண சபை உறுப்பினர்கள் மன்றத்தின் தலைவர் கஞ்சன ஜயரத்ன தெரிவித்துள்ளார்.


மாகாண சபைத் தேர்தல் பிற்போடப்பட்டு தற்போது 4 ஆண்டுகளாகிறது. சகல மாகாண சபைகளின் உறுப்பினர்களது பதவிக்காலம் முடிவடைந்துள்ளதுடன், மக்கள் பிரதிநிதிகள் இல்லாது இயங்கி வருகிறது. இது இலங்கை அரசியல் வரலாற்றில் ஓர் கறையாகும்.

மாகாண சபைத் தேர்தலை இரண்டு வழிமுறைகளின் கீழ் நடத்துவது குறித்து அமைச்சரவை பத்திரமொன்றை விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் ஜனக்க பண்டார தென்னகோன் அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார்.

அந்த பத்திரத்தை ஆராய வேண்டுமென கோரி ஒரு வார கால அவகாசம் கேட்டிருந்தனர். எனினும், தற்போது பல மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் இதற்கான முடிவு இதுவரையிலும் எடுக்கப்படவில்லை.

எந்தவகையிலாவது மாகாண சபைத்தேர்தலை கூடிய விரைவில் நடத்துங்கள். அது எந்த முறையாக இருந்தாலும் பிரச்சினையில்லை. தேர்தலை சந்திக்க நாம் தயாராகவே இருக்கிறோம். ஆகவே ஜனநாயக ரீதியில் தேர்தலை நடத்துமாறு நாம் சகல தரப்பினரிடமும் கேட்டுக்கொள்கிறோம் என அவர் தெரிவித்தார். (நி-4)

# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி



## ஆன்மிக முன்னேற்றம் தரும் விரதம்

*(தொடர்ச்சி)*

சக்தி விரதங்களும் மக்களால் குறிப்பாகப் பெண்களால் மிகவும் விரும்பிக் கடைப்பிடிக்கப்படுகிறது. நவராத்திரி, ஆடிப்பூரம், ஆடிச் செவ்வாய், மாசி மகம், மார்கழி வழிபாடு போன்றவை சக்தி விரதங்களாக உள்ளன.

இறைவனை நினைத்து பணிந்து வேண்டி கடைப்பிடிக்கப்படும் இத்தகைய விரதங்கள் தவிர கிரகங்களின் மாற்றத்தால் வரும் தொல்லைகள், துயரங்களைப் போக்கிக் கொள்ளவும் நம் முன்னோர்கள் பரிகார விரதங்களை ஏற்படுத்தினார்கள். சனி கிரகத்தால் பீடையா...சனிப் பிரதோஷ விரதம் இருந்தால் அந்தப் பீடை அகன்று விடும் என்று கணித்துள்ளனர்.

அதுபோல செவ்வாய் கிரக தோஷத்துக்கு ஆற்று மணலை எடுத்து வந்து அதை செவ்வாய் கிரகமாக ஆவாகனம் செய்து விரதம் இருந்து வழிபட்டால் பலன் கிடைக்கும்.

புதன் கிரக தோஷம் இருந்தால் விஷ்ணுவுக்கு அபிஷேகம் செய்து விரதம் இருந்தால் வெற்றி உண்டாகும். குரு பகவான் அருள் பெற வேண்டுமானால் தட்சிணாமூர்த்திக்கு ஒரு மண்டலம் விரதம் இருந்து வழிபடுதல் வேண்டும்.

சுக்கிர கிரகத்தால் அனுகூலம் பெற வேண்டும் என்று நினைப்பவர்கள் இரவில் தீபம் ஏற்றி அம்பிகையை நினைத்து விரதம் இருந்தால் நல்லது நடக்கும்.

அன்றும் இன்றும் விரதங்களால் மக்கள் நினைத்த வரம் பெற்றனர். ஆனால் இப்போது இருப்பதை விட பழங்காலத்தில் மக்கள் மிக மிக கடினமான விரதங்களைக் கடைப்பிடித்தனர்.

அந்தக் காலத்தில் நம் முன்னோர்கள் யாசிதம், பாத கிரிச்சனம், பன்னக்கிரிச்சனம், சௌமிய கிரிச்சனம், அதிகிரிச்சனம், கிரிச்சனாதி கிரிச்சனம், பிரசர்பத்திய கிரிச்சனம், பார்க கிரிச்சனம், சாந்தபன கிரிச்சனம், மகா சாந்தபன கிரிச்சனம், சாந்திராயணம், வால சாந்திராயணம் என்று 12 வகையான விரதங்களைக் கடைப்பிடித்தனர்.

தினமும் மூன்று வேளை குளித்து விரதம் இருந்தனர். வளர்பிறை முதல் நாள் தொடங்கி ஒவ்வொரு பிடி உணவைக் குறைத்துக் கொண்டே வரும் வகையில் இருந்தனர். அதுபோல தேய்பிறை முதல் நாள் தொடங்கி ஒவ்வொரு பிடி உணவை அதிகரித்து வரும் விரதத்தையும் கையாண்டனர்.

மூன்று நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டாமல் இருக்கும் விரதத்தையும் இருந்தனர். சிலர் 12 நாட்கள் கூட சாப்பிடாமல் விரதம் இருந்ததுண்டாம். அந்தந்த கிரக நிலைக்கு ஏற்ப இப்படி விதம் விதமாக விரதம் இருந்தனர்.

ஆனால் இந்த வகைகளின்படி விரதம் இருப்பது என்பது தற்போதைய வாழ்வியல் நடைமுறைக்குப் பொருந்துவதாக இல்லை. எனவேதான் மாதம் ஒரு முறையாவது விரதம் இருங்கள் என்று ஆன்மிகப் பெரியோர்களும் டாக்டர்களும் வலியுறுத்துகிறார்கள்.

கடந்த பல நூற்றாண்டுகளாக ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக விரதம் இருப்பதிலும் கூட மாற்றங்கள் வந்து விட்டன. தற்போது மக்களிடையே வார விரதம், மாத விரதம், ஆண்டு விரதம் என மூன்று வகையான விரதங்கள் பழக்கத்தில் உள்ளன.

வார விரதம் என்பது வாரத்தின் 7 நாட்களில் எந்தக் கடவுளை வேண்டி எந்தத் தினத்தில் விரதம் இருக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது. திங்கட்கிழமை சிவனுக்கு உகந்த நாள். அன்று சிவன் அருள் பெற விரதம் இருக்கலாம்.

செவ்வாய்க்கிழமை துர்க்கை, அனுமன் அருள்பெற விரதம் இருக்கலாம். புதன்கிழமை விநாயகர், வியாழக்கிழமை விஷ்ணு, தட்சிணாமூர்த்தியை நினைத்து விரதம் இருந்தால் திருமணத் தடை அகலும். செல்வம் பெருகும்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## ஊழல் வழக்கிலிருந்து மூவர் விடுதலை

(கொழும்பு)

முன்னாள் சட்டமா அதிபரும் பிரதம நீதியரசருமான மொஹான் பீரிஸ் முன்னாள் பிரதி சொலிசிட்டர் ஜெனரலும் தற்போதைய நீதியரசர் திலீப் நவாஸ் உள்ளிட்டோர் இலஞ்ச ஊழல் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த உத்தரவினை கொழும்பு தலைமை நீதவான் புத்த ஸ்ரீ ராகல நேற்று பிறப்பித்தார். (நி-4)

## தரமற்ற எண்ணெய் மீள் ஏற்றுமதிக்கு உத்தரவு

(கொழும்பு)

தரமற்ற தேங்காய் எண்ணெய் என மாதிரி பரிசோதனையில் ஒப்புவிக்கப்பட்டுள்ள சுத்திகரிக்கப்படாத எண்ணெயை இந்த வாரத்திற்குள் மீள் ஏற்றுமதி செய்யுமாறு சுங்கப் பணிப்பாளர் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளார்.

3 நிறுவனங்களால் இறக்குமதி செய்யப்பட்ட தரமற்ற தேங்காய் எண்ணெயில் அஃப்லோடொக்சின் என்ற புற்றுநோய்க் காரணிகள் அடங்கியுள்ளமை இரண்டாவது முறையாகவும் நடத்தப்பட்ட மாதிரி பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது. (நி-4)

## 6 மோ.சைக்கிள், 3 ஆட்டோ திருட்டு

(கொழும்பு)

நாட்டில் நேற்று ஆறு மோட்டார் சைக்கிள்கள் மூன்று முச்சக்கர வண்டிகள் திருடப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் தமக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை, புத்தளம், பொறளை, தெமட்டகொட, கந்தனா, அத்துருகிரியா, அங்குணகொளபெலஸ்ஸ, சிலாபம் மற்றும் அம்பலாங்கொடை ஆகிய பகுதியிலேயே இந்த திருட்டு சம்பவங்கள் நேற்று முன்தினம் பதிவாகியுள்ளன. நாட்டில் தற்சமயம் மோட்டார் வாகனங்களின் திருட்டு அதிகரித்துள்ளமையினால் வாகனங்களை நிறுத்திவிட்டு செல்லும்போது பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர். (நி-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 120 | 140 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 130 | 160 | 200 |
| தக்காளி | 100 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 50 |
| கோவா | 80 | 90 | 100 |
| கரட் | 180 | 180 | 200 |
| பூசணி | 70 | 60 | 80 |
| புடோல் | 120 | 80 | 160 |
| வாழைக்காய் | 70 | 50 | 100 |
| சின்ன வெங்காயம் | 160 | 140 | 200 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 100 |
| பாகற்காய் | 260 | 200 | 140 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 160 |
| கருணைக் கிழங்கு | 140 | 120 | 160 |
| பயற்றங்காய் | 150 | 120 | 160 |
| லீக்ஸ் | 140 | 120 | 120 |
| பீற்றூட் | 100 | 80 | 100 |
| கறிமிளகாய் | 150 | 160 | 200 |
| முருங்கைக்காய் | 600 | 600 | 800 |
| போஞ்சி | 150 | 180 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 120 |
| கீரை - 1 பிடி | 50 | 40 | 50 |
| தேசிக்காய் | 180 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 75 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 260 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 180 | 140 | 300 |
| முள்ளங்கி | 40 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 40 |
| வல்லாரை | 80 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 60 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவரை தீர்த்து வைக்கப்படாத ஸ்ரீநகர் கிராம மக்கள் பிரச்சினை

(நெளுக்குளம்)

**ஸ்ரீநகர் கிராம மக்களின் அடிப்படை பிரச்சினைகளை தீர்த்து வைக்குமாறு கோரி முன்னெடுக்கப்பட்டுவரும் சத்தியாக்கிரக போராட்டம் 50 நாட்களை எட்டுகின்ற நிலையில் நேற்று துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டது.**



குறித்த துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது கிராமத்தின் அடிப்படைத் தேவைகளை வலியுறுத்தி தொடர்ச்சியாக ஸ்ரீநகர் சனசமூக நிலைய முற்றத்தில் இரவு பகலாக சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகிறோம். காணிகளுக்கு உறுதிப்பத்திரம், வீடு அற்றவர்களுக்கு வீடு, வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட மக்களின் வீடுகளை திருத்துவதற்கு உதவி, பொது நோக்கு மண்டபம், முன்பள்ளிக் கட்டமைப்பு, விளையாட்டு மைதானம், கிராமத்தின் வடிகாலமைப்பு போன்ற கோரிக்கைகளை முன்வைத்து போராடி வருகிறோம்.

பிரதேச செயலாளர், உரிய திணைக்களங்களுடன் பேசி பிரச்சினைகளை பதின் நான்கு நாட்களுக்குள் முடிப்பதாக கூறிய போதிலும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் இருப்பது எமக்கு கவலையளிக்கின்றது.

எமது கோரிக்கைகள் தேர்தல் காலங்களில் வாக்குறுதிகளாக வழங்கப்பட்டு தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு வந்ததன் விளைவாகவே நாங்கள் தொடர் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம்.

இந்த விடயத்தில் எங்களுடைய கோரிக்கைகளை அனைத்து தரப்பினருக்கும் தெரியப்படுத்தி விட்டோம். ஆனால் முடிவு மட்டும் கிடைப்பதாக இல்லை.

எனவே எங்களுடைய சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு தீர்வினை வழங்குமாறு அரசாங்கத்தையும் உரிய பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளையும் கேட்டு நிற்கின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (5-4-299)

# நுண்கடன் பிரச்சினைகளுக்கு தீர்வுகோரிப் போராட்டம்

(முறிகண்டி)

நுண்கடனால் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளிற்கு தீர்வு கோரி கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டம் நேற்றுக்காலை 10.30 மணியளவில் முழுங்காவில் பகுதியில் இடம்பெற்றது.


தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இக்கவனயீர்ப்பு போராட்டம் முழங்காவில் சந்தியில் ஆரம்பிக்கப்பட்டு முழங்காவில் தேசிய பாடசாலைவரை சென்று அங்கு கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. (5-4-100)



அகில இலங்கை சமுர்த்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர்கள் சங்கத்தின் மாநாடு நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது. கிளிநொச்சி மாவட்ட செயலக தொழில்பயிற்சி வளாக மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த மாநாட்டில் அச்சங்கத்தின் செயலாளரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜகத்குமார சுமித்த ஆராய்ச்சி, முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், சங்கத்தின் உறுப்பினர்கள், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(படம்:- சப்தசங்கரி)

# கடலட்டை இனப்பெருக்க நிலையம் திறந்துவைப்பு



(மன்னார்)

சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்தின் பிரகாரம் மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தை வலுப்படுத்த கடற்தொழில், கைத்தொழிலை மேம்படுத்தும் வகையில் மன்னார் ஓலைத் தொடுவாய் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட "கடலட்டை இனப்பெருக்க நிலையம் நேற்று செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

தேசிய நீர் வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ஜயந்த விஜேரத்தின வின் அழைப்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இராஜாங்க அமைச்சர் கஞ்சன விஜேசேகர ஆகியோர் இணைந்து குறித்த "கடலட்டை இனப்பெருக்க நிலையத்தை திறந்து வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து கடலட்டை உற்பத்தியை நேரடியாக பார்வையிட்டதோடு உரிய தரப்பினருடன் கலந்துரையாடியுள்ளனர்.

இதன் போது வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டி மேல், மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் உட்பட திணைக்கள தலைவர்கள், அமைச்சின் பிரதி நிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.(5.4.286)

# மார்ச் மாதத்தில் மட்டும் 496 தொற்றாளர்கள்

(நல்லூர்)

யாழ் மாவட்டத்தில் மார்ச் மாதத்தில் மாத்திரம் இதுவரை 496 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அத்தோடு 2021 ஆம் ஆண்டில் இதுவரை 668 கொரொனா தொற்றாளர்கள் யாழ்.மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் மருத்துவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (5-4-33)

# நீர்க்கசிவு சீர்செய்யப்பட்டது

(கண்டாவளை)

வவுனியா ஓமந்தை இளமருதன்குளம் மாறை யிலுப்பைக் குளத்தில் ஏற்பட்ட நீர் கசிவு பாதுகாப்புப் படையினரால் சீர் செய்யப்பட்டது.

குறித்த குளத்தின் கீழ் 96 ஏக்கருக்கும் அதிகமான நெல் வயல்கள் மற்றும் மரக்கறி பயிர்ச்செய்கை இடம்பெறுகிறது.

குளத்தின் நீர்க்கசிவை அவதானித்த மக்கள் வவுனியா மாவட்டச் செயலாளர் சமன் பந்துலசேனவிற்கு அறிவித்தனர்.

அதனையடுத்து அரச அதிபர் படையினருக்கு அவசியமான போக்குவரத்து வசதிகள் மற்றும் மண்ணையும் நீர்ப்பாசனத் துறை அதிகாரிகளின் சேவையினையும் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்திருந்தார்.

அதனையடுத்து படையினருடன் கலந்துரையாடிய அப்பகுதி பொதுமக்களும் படையினரும் விரைவாகச் செயற்பட்டு குளத்தின் நீர்க்கசிவைக் கட்டுப்படுத்தினர். (5-4-315)

# இளைஞர் குழு அட்டகாசம் இருவர் காயம்

(நெளுக்குளம்)

வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் இளைஞர் குழு ஒன்று வர்த்தக நிலையத்திற்குள் புகுந்து கைகலப்பில் ஈடுபட்டதில் இருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்றினுள் புகுந்த ஒரு குழுவினர் அதன் உரிமையாளர் மீது தாக்குதல் நடத்தியதுடன், அருகில் இருந்த வர்த்தக நிலையங்களில் நின்றோர் மற்றும் வீதியில் நின் றோரையும் அச்சுறுத்தியுள்ளனர்.

இதன்போது காயமடைடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(5.4.250)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சான்றோர் என்பவர்கள் குறைகளை அறியாதவர்கள் அல்லர். குறைகள் இருந்தும் அவற்றைத் திருத்திக் கொண்டு குணங்களை உண்டாக்கிக் கொண்டவரே சான்றோர் ஆவர். ~ ஓர் அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தனிமைப்படுத்தப்பட்டவர்களை பட்டினி போட்டு விடாதீர்கள்!

தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களின் உணவுத் தேவை பூர்த்தி செய்யப்படவில்லை என்ற குற்றச்சாட்டுப் பரவலாக எழுந்துள் ளது.

கொரோனாத் தொற்றைக் காரணம் காட்டி தனிமைப்படுத்தல் இடம்பெற்றுள்ளது.

இந்த நடைமுறை தவிர்க்க முடியாததாக இருப்பதால் அதுபற்றிய விமர்சனங்களுக்கு இடமிருக்க நியாயமில்லை.

மாறாக, தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கான உணவுத் தேவைகளை வழங்குகின்ற பொறுப்பை அந்தந்தப் பிரதேச செயலக நிர்வாகங்கள் மேற்கொள்ள வேண்டும் என்பது இங்கு கட்டாயமானது.

ஏனெனில் தனிமைப்படுத்தல் என்பது ஏலவே முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டு செய்யப்பட்டதல்ல.

கொரோனாத் தொற்று இனங்காணப்பட்ட கணத்திலிருந்து தனிமைப்படுத்தல் பொது சுகாதாரப் பரிசோதகர்களால் அமுல்படுத்தப்படுகின்றது.

ஆக, தனிமைப்படுத்தப்பட்ட குடும்ப உறுப்பினர்கள் வெளியில் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது.

இதுதவிர, தனிமைப்படுத்தப்பட்ட வீடுகளுக்கும் இடங்களுக்கும் செல்வதற்குப் பொதுமக்களும் அஞ்சுகின்றனர்.

எனவே தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்கள் உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் இல்லாமல் பெரும் கஷ்டங்களை அனுபவிக்க நேரிடுகிறது.

எனவே ஒவ்வொரு பிரதேச செயலகங்களும் தத்தம் எல்லைக்குட்பட்ட குடும்பங்கள் தனிமைப்படுத்தப்படும்போது, அவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

ஆனால் அவ்வாறானதொரு தயார் நிலைக்கு அரச உதவிகள் கிடைக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

இங்குதான் ஒரு முக்கிய விடயத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதாவது, தனிமைப்படுத்தப்படும் குடும்பங்களுக்கான நிவாரணப் பொருட்களை அரசாங்கம் தரவில்ல என்பதற்காக, அந்த உதவிகள் கிடைக்காமல்போவதென்பது, பொதுமக்களைப் பட்டினி போடுகின்ற செயலாக அமையும்.

எனவே அரசாங்கம் நிவாரணப் பொருட்களைத் தரவில்லை என்பதற்கப்பால், நிவாரணப் பணிகளை மேற்கொள்ளக்கூடிய எத்தனையோ பொது அமைப்புகளும் தனிநபர்களும் நம் மத்தியில் உள்ளனர்.

கடந்த வருடம் கொரோனாத் தொற்றுக் காரணமாக தொடர் ஊரடங்கு அமுலில் இருந்தபோது – பொதுமக்கள் வெளியில் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டவேளை, வீடு வீடாகத் தேடிச் சென்று உணவுப் பொருட்களை வழங்கியவர்கள் நம் மக்கள்.

ஆகவே தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்குவது தொடர்பில்; குறித்த பிரதேச செயலர்கள் பொது அறிவிப்பு விடுத்தால், எம் பொதுமக்கள் தாராளமாக உதவுவார்கள் என்பதை மறந்து விடாதீர்கள்.

# அடைக்கலம் புகுந்த தமிழர்களை ஜேர்மனி திருப்பி அனுப்ப நினைப்பது கவலையளிக்கிறது

## கிளிநொச்சியில் சிறிதரன் எம்.பி

(கிளிநொச்சி)

இலங்கை விவகாரத்தில் கூட்டு நாடாக ஜெனிவாவில் செயற்பட்ட ஜேர்மனி அடைக்கலம் புகுந்தவர்களை திருப்பி அனுப்ப நினைப்பது கவலை அளிக்கின்றது என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்விடயத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜேர்மனியில் அடைக்கலம் கோரியிருக்கின்ற தமிழர்களை அந்நாட்டிலிருந்து வெளியேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன. குறித்த விடயம் தொடர்பில் ஆழமாக சிந்திக்குமாறு ஜெனிவா நாட்டையும் அங்குள்ள மனித உரிமை அமைப்புக்களையும் நாங்கள் வினயமாக கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த நாட்டிலே பல நபர்கள், பல அமைப்புக்கள் தடை செய்யப்படுகின்றபோது, கேள்விக்குட்படுத்தப்படாது பலர் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற நிலையில் மனித உரிமைகளிற்காக குரல் கொடுக்கின்ற குறிப்பாக இம்முறை ஆறு நாடுகள் சேர்ந்து கோப் குரூப்பாக இருந்து மனித உரிமை ஆணையகத்திலே இலங்கை தொடர்பான மனித உரிமை மீறல்களுக்கெதிரான விடயங்களை கையாண்ட ஜேர்மனி அந்தக்கையோடு அங்கிருக்கின்ற தமிழர்களை திருப்பி அனுப்ப முனைவது மிகப் பெரிய பாரதூரமான நிலைமையை இந்த மண்ணிலே ஏற்படுத்தப்போகின்றது.

அங்கிருக்கின்ற தமிழர்கள் இப்போதைக்க இங்கு வந்து வாழ முடியாத சூழல் இருப்பதை ஜேர்மனிய நாடும், அங்குள்ள மனித உரிமை செயற்பாட்டாளர்களும் கருத்தில் கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன். இன்னும் இந்த நாட்டிலே உள்ள அரசின் நெருக்கடிகளும், அதிரடி நடவடிக்கைகளும் வேகமாக அதிகரித்து செல்கின்ற சூழலில், ஜேர்மனி திருப்பிஅனுப்பிவைக்கின்ற நடவடிக்கையை தற்காலிகமாக ஒத்தி வைக்க வேண்டும் எனவும் அதனை கைவிட வேண்டும் எனவும் நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்.

முக்கியமாக யுத்தம் நடைபெற்று சமாதானம் பேசப்பட்ட 2001ஆம் ஆண்டு காலப்பகுதியில் விடுதலைப் புலிகளிற்கும், அரசாங்கத்திற்கும் பேச்சுவார்த்தை நடைபெறுகின்றபோது, போர் நிறுத்த கண்காணிப்பாளர்களாக பல நாடுகளிலிருந்து இங்கு கடமையாற்றிக் கொண்டிருந்தார்கள். அவ்வாறான நிலையில் ஐரோப்பிய நாடுகள் உட்பட பல நாடுகள் விடுதலை புலிகள் அமைப்பை தடை செய்து கொண்டிருந்தார்கள். அதுவும் அக்கால கட்டத்தில் அரசியல் தீர்வுக்கு குந்தகமாக இருந்தது.

அதேவேளை இன்றும் பாதிக்கப்பட்ட மக்கள் நீதி வேண்டும் என்று போராடிவருகின்ற போது, ஜேர்மனி எடுக்கின்ற முடிவு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்றார்.

(ம-3,100,315,316)

## மின்சாரம் தடைப்படும்


உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை முதலாம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** கணபதி ஆலை, கொற்றாவத்தை, நவிண்டில்- உடுப்பிட்டி வதிரி வீதி, பொலிகண்டி ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** ஜெயபுரம் தேவாலயம், ஜெயபுரம் பாடசாலை, ஜெயபுரம், கிராஞ்சி, கிராஞ்சி சிவபுரம், நாகபடுவான், பாலாவி, பொன்னாவெளி, வலைப்பாடு, வேரவில், அன்புபுரம், டொன்பொஸ்கோ பல்லவராயன் கட்டு, இரணைமாதா நகர், கிருஷ்ணநகர், குமுழமுனை, முழங்காவில், முழங்காவில் கோபுரம், நாச்சிக்குடா டயலொக் கோபுரம், நாச்சிக்குடா, சின்னப்பல்லவராயன்கட்டு சோலை, சோலை பல்லவராயன் கட்டு, விஜிவீதி, 651 ஆம் படைப்பிரிவு இராணுவ முகாம், வெள்ளாங்குளம், முழங்காவில்ஐஸ்தொழிற்சாலை, முழங்காவில்கடற்படை முகாம், கனகராயன்குளம், ஆலங்குளம், புதுவிளான், கறுப்புக்குத்தி இராணுவமுகாம், குஞ்சுக்குளம், குறிசுட்டான் குளம், மன்னங்குளம், முதிரங்குளம், பரசங்குளம், பெரிய குளம்-561 பிரிகேட் இராணுவவமுகாம், பெரியகுளம்- சேவாலங்கா, பெற்றோல் எரிபொருள் நிரப்பு நிலையத்தடி கனகராயன்குளம், புதூர் கோவிலடி, புத்தூர் கோபுரம், புதுக்குளம் புதூர் கிராமம், விசேட அதிரடிப்படை இராணுவமுகாம் மாங்குளம், விக்னகுளம், 56 ஆம் பயிற்சி இராணுவமுகாம் கனகராயன் குளம், இ்கோன்-மாங்குளம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** சின்ன சிப்பிகுளம், தந்திரிமலை வீதி, வீரபுரம், நியூ ஸ்ரீல் பிவிரி லிமிடெட்- இரும்பு தொழிற்சாலை, சமணங்குளம் ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும்.

# ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



## குருவும் சீடரும்

ம- தன்னைப்பற்றிய விபரங்களையெல்லாம் கூறினார். அதைக் கேட்டுக் கொண்டிருக்கும்போது ஸ்ரீராமகிருஷ்ணர் நடுநடுவே வேறு நினைவில் ஆழ்ந்துவிடுவதுபோல் ம-விற்குத் தோன்றியது. அதுதான் பரவசநிலை என்பதைப் பின்னர் அவர் தெரிந்து கொண்டார். தூண்டிலைக் கையில் ஏந்தியபடி ஒருவன் மீன் பிடிக்க உட்காருகிறான். இரையை மீன் கௌவும்போது மிதவையில் அசைவு ஏற்படும். மீன்பிடிப்பவன் கண்ணும் கருத்துமாக அதையே கவனித்துக் கொண்டிருப்பான். யாரிடமும் பேச மாட்டான். மனம் ஒருமித்த இதுபோன்ற நிலையே பரவச நிலை. சந்தியா வேளையில் குருதேவர் இப்படிப் பரவச நிலையில் இருப்பார் என்றும், சிலவேளைகளில் வெளி உணர்வை முற்றிலும் இழந்துவிடுவார் என்றும் ம- பிறகு கேள்விப்பட்டார். பின்னாட்களில் தானே பலமுறை கண்டும் இருக்கிறார்.

ம-: 'நீங்கள் இப்போது சந்தியாவந்தனம் செய்வீர்கள் அல்லவா? நாங்கள் போய்வருகிறோம்.'

ஸ்ரீராமகிருஷ்ணர் (பரவச நிலையில்): 'சந்தியாவா? இல்லை அந்த மாதிரி எதுவும் இல்லை.'மேலும் சிறிதுநேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு ம-ஸ்ரீராமகிருஷ்ணரை வணங்கி விடைபெற்றார். 'மறுபடியும் வா' என்றார் ஸ்ரீராமகிருஷ்ணர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# கரும்பூலா/காட்டுக்கீழ்க்காய்நெல்லி



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**Botanical Name :-**
**Phyllonthus multiflorus**
**Family:-**
**Euphor biaceae**
**Engl:-**
**Black honey Shrub/Ink Fruit Plant**
**Sinh:-**
**Welkayila**


இது ஓர் பெருஞ்செடி அல்லது சிறுமர வகையைச் சேர்ந்தது. 2.5-3 மீற்றர் உயரம் வரை வளரக் கூடியது. நிறைய கிளைகள் விட்டிருக்கும். தனியிலை, ஒன்றுவிட்ட இலையமைப்புக் கொண்டது. கோளவடிவான இலைகள். குறுகிய இலைக் காம்புகளைக் கொண்டது. ஒழுங்கான, ஒரு பாலான பூக்கள். றோஸ் நிறமானவை. ஊதா கலந்த கறுப்பு நிற உருண்டையான பழங்கள் சதைப் பிடிப்பாகவும், பிரகாசமாகவும் இருக்கும் வருடம் முழுவதும் பூக்களைக் காணலாம். வறண்ட பிரதேசங்களில் பொதுவாக இதன் பரம்பலைக் காணலாம். இலைகளுக்கு கீழ் பழங்கள் காணப்படுவதால் காட்டுக் கீழ்க்காய் நெல்லி என அழைக்கப்படுகிறது.

யாழ் மாவட்டத்தில் புதர்ப்பிரதேசங்களில் இதன் பரம்பல் அதிகமாகக் காணப்படும். இதன் இலைகளில் Tannic acid வேதியப்பொருள் காணப்படும். அதன் இலைகள், பழங்கள், தண்டுகள், வேர்கள் அனைத்தும் மருத்துவ குணமிக்கவை.

இதன் பழங்கள் இனிபுச் சுவை உடையது. உடலுக்கு குளிர்ச்சியைக் கொடுக்கக் கூடியது. நரம்பு மண்டலத்தை பலப்படுத்தக் கூடியது. நீர்வளம் மிக்க வயல் கரைகளில் அதிகம் செழித்துக் காணப்படும். கிளைகள் வலுவற்றவை வளையக்கூடியது. நார்க்கலங்கள் அதிகமாக தண்டுகளில் காணப்படும். பழம் கறுப்பாகவும், விதைகள் பச்சையாகவும் காணப்படும்.

இதனுடைய பூக்கள், காய்கள், இலைகள் துவர்ப்புச் சுவையுடையது. இதனுடைய குச்சிகளால் (செலுலோஸ் இல்லாத) பல் துலக்கலாம். பல்லீறுகளில் இருந்து இரத்தம் வடிவதை தடுக்கும். பற்களை திடகாத்திரமாக வைத்திருக்கும்.

கரும்பூலா மூலிகையானது தோல்வரட்சி, இளநரை, என்புவிரிசல், மலக்கட்டு, மூலம், பல்நோய்கள், பல் ஆட்டம் போன்றவற்றை நிவர்த்தி செய்யும். விந்து நீத்துப் போதலுக்கும் பயன்படுத்தலாம்.



இளநரைக்கு கரும்பூலா பழம் - ஒரு கைப்பிடியளவு, கரும்பூலா இலை - இரண்டு கைப்பிடியளவு, கரிசலாங்கண்ணி - ஒரு கைப்பிடியளவு, கறிவேப்பிலை - ஒரு கைப்பிடியளவு, மொசுமொசுக்கை இலை - ஒரு கைப்பிடியளவு, சின்ன வெங்காயம் -10 இவை எல்லாவற்றையும் இடித்துச் சாறு எடுத்து 500 மில்லி தேங்காய் எண்ணெயில் கலந்து 10 கிராம் கடுக்காய் தோல் பொடித்து சேர்த்து அடுப்பேற்றி சிறுதீயாக காய்ச்சிக்கொண்டு வரும் போது எண்ணெய் நிறம்மாற ஆரம்பிக்கும் அந்தத்தருணம் இறக்கி ஆறவிட்டு போத்தலில் விட்டு வைத்திருக்கவும். இந்தத் தைலத்தை தலைக்கு தடவிவர இளநரை கருமைநிறமாக மாற ஆரம்பிக்கும்.

சித்தர்களின் கோட்பாட்டின் படி கருப்பூலா மூலிகைகளில் காயகல்ப தன்மையும், மருத்துவப் பண்புகளும் நிறைந்தவையாகும்.

இதனுடைய இலைகளை சேகரித்து 1 பங்கு இலைகளுக்கு 4 பங்கு நீர் விட்டு 1/4 பங்காக சுண்டக் காய்ச்சி 50 மில்லி காலை, மாலை சாப்பாட்டின் முன்பு எடுத்துவர நாரிப் பிடிப்பு, கை, கால் பிடிப்பு ஆகியவற்றை படிப்படியாக குறைக்கக் கூடியது.



இலைகளை குடிநீரிட்டு வாய்கொப்பலித்து வர வாய்த்துர்நாற்றம் நீங்கும்.

இதன் பழங்கள் கிடைக்கும் போது தினமும் சாப்பிட்டுவர உடலுக்கு பலத்தைக் கொடுக்கும். அதேநேரம் நன்கு கருமையான கூந்தலும் வளரும்.

நன்றாக முற்றிய தேங்காயை எடுத்து அதன் கண்ணில் துவாரமிட்டு உள்ளிருக்கும் இளநீரை வெளியே ஊற்றிவிட்டு தேங்காயின் முக்கால் பாகத்திற்கு துவாரமூடாக கரும்பூலா பழங்களை போட்டு நிரப்பி மூங்கில் குச்சிகளால் துவாரத்தை அடைத்து காரிக்கன் துணியால் தேங்காயை நன்கு சுற்றி ஈரமான சதுப்பு நிலத்தில் 30 நாட்கள் ஒரு அடி குழிதோண்டி புதைத்துவைத்து எடுத்து தேங்காய் ஓட்டை நீக்கி தேங்காயையும், உள்ளிருக்கும் கரும்பூலா பழங்களையும் சேர்த்து கல்வத்தில் வைத்து நன்கு அரைத்து ஒரு வாணலியில் போட்டு 1000 மில்லி தேங்காய் எண்ணெய்விட்டு பதமுற காய்ச்சி வடித்து (பூலாத்தைலம்) முடிக்குத் தடவிவர முடிநன்கு செழித்துவரும். உடலிற்கு குளிர்ச்சியையும் கொடுத்து கண் எரிச்சலையும் நீக்கும்.

இதன் இலைச்சாற்றை 10 மில்லி அளவு காலை, மாலை பருகிவர இரத்த மூலம் குணமாகும்.

பூலா வேர்ப்பட்டையை 50 கிராம் ஒன்றிரண்டாய் இடித்து 250 மில்லி நீரிலிட்டு பாதியாகும் வரை காய்ச்சி வடி கட்டி வாய் கொப்பளித்து வர பல்லீறுகளில் ஏற்படும் இரத்தக் கசிவு நீங்கும். இக்குடிநீரை 15 மில்லி அளவாக காலை, மாலை குடித்து வர குருதி மூலம், இடுப்புவலி கை, கால் மூட்டுக்களில் ஏற்படும் வலி நீங்கும்.

இதன் இலைகளை நன்கு கழுவி உலர்த்தி பொடித்து அரித்து அரித்த பொடியை புண்களின் மேல் தூவ புண்கள் ஆறும்.

இதன் பழங்களை சாப்பிட்டுவர இரத்தம் சுத்தியாகும். குடலில் ஏற்படும் அழற்சியையும் நீக்கக்கூடியது.

கரும்பூலா ஆனது உடலைத்தேற்றி, உடலிற்கு குளிர்ச்சியைக் கொடுத்து, சிறுநீரையும் நன்கு கழியச் செய்யக்கூடிய மூலியாகும்.

இதனால் செரியாமை, கணச்சூடு, வயிற்றுப் பொருமல், சிறுநீர்க்கட்டு, சொறி, சிரங்கு, ஆகியவை நீங்கும்.

மாந்தங்கணம்பொருமல் மாறாச் சலத்துடனே சேர்ந்த சொறிசிரங்குந் தீருங்காண்-ஏந்தெழிலைச் சேர்ப்பாகக் கொண்ட செழுந்திருவே! பூவிலுறை பூலாப் பூண்டைநினை.

இதன் இலைச்சாறு ஒரு தேக்கரண்டி எடுத்து கற்கண்டு சேர்த்து நாள் ஒன்றிற்கு மூன்று முறை சாப்பிட சிறுநீர் நன்றாய் இறங்கும். உடலிலெழும் அனல் தணியும்.

இதன் இலைச்சாற்றுடன் வால்மிளகு சேர்த்து மாத்திரை செய்து வாயிலடக்கி வர ஈறுகட்டு, புண் முதலியன நீங்கும்.

இளநரைக்கு கரும்பூலா எண்ணெய் சாயப்பொடி, கரும்பூலா இலை- 200 கிராம், கரும்பூலா பழம் - 200 கிராம், தேங்காய் எண்ணெய் - 250 மில்லி எண்ணெயை சூடாக்கி இறக்கி, கரும்பூலா இலை, பழங்களை போட்டு ஒரு வாரம் அப்படியே வைத்திருக்க வேண்டும் இலையிலும், பழத்திலும் உள்ள சத்துக்கள் ஒரு வாரத்தில் எண்ணெயில் இறங்கி இருக்கும். இதனை தலைக்கு தடவிவர முடி கருமையாக மாற ஆரம்பிக்கும்.

இளநரைக்கு மூலிகைச் சாயப்பொடி கரும்பூலா இலைகள் -100 கிராம், கரிசலாங்கண்ணி இலைகள் -100 கிராம், கறிவேப்பிலை - 100, மருதோன்றி இலை. -20 கிராம் எல்லாவற்றையும் உலர்த்தி, பொடித்து அரித்து வைத்துக் கொள்ள வேண்டும். முடியின் அளவிற் ஏற்ப செயற்கை சாயப்பொடிக்கு பதிலாக இப்பொடியை அளவாக எடுத்து வெந்நீரில் குழைத்து முடிக்கு தடவி 30 நிமிடங்கள் ஊறவிட்டு பின்பு தலை முழுகி வர இளநரை குறைந்து முடி கருமை நிறமடையத் தொட ங்கும்.

முதியார் கூந்தல் இலைகள், கரும்பூலா இலைகளை நான்கு, ஐந்து நாட்கள் நிழலில் உலர்த்த கருமையான இலைகள் கிடைக்கும். இவற்றை பொடித்து அரித்து மூலிகைச் சாயப்பொடியாக பயன்படுத்தலாம்.

பொடுகு நீங்குவதற்கு, கரும்பூலா இலைகள், சிகைக்காய், வெந்தயம், செவ்வரத்தம் பூ இதழ்கள் எல்லாவற்றையும் சம அளவாக எடுத்து உலர்த்தி, பொடித்து வெந்நீரில் குழைத்து (முடியின் அளவிற்கு ஏற்ப) அடிமயிரில் தடவி 30 நிமிட நேரம் ஊறவைத்து தலை முழுகிவர பொடுகும் நீங்கும். உடலிற்கு குளிர்ச்சியையும் கொடுக்கும்.

சித்திரை மாதத்தில் அதிகளவில் பூக்கள் பூத்துகாய்க்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

பக்ஷ பதவியேற்றபின், கிராமிய அபிவிருத்தி மற்றும் கிராமிய மக்களின் பிரச்சினைகளை நேரடியாகச் சென்று மக்களது பிரச்சினைகளை அறிந்து கொள்ளும்முகமாக "கிராமத்துடன் உரையாடல்" வேலைத்திட்டத்தினை முன்னெடுத்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்றபின், வட பகுதி நோக்கி இடம்பெறும் முதலாவது விஜயம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (ம-3,250)

## சாவகச்சேரியில்...

சென்ற வேளையில் வீட்டு அறையில் காணப்பட்ட மின்விசிறியில் தூக்கு மாட்டி குறித்த மாணவி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் கோவிற்குடியிருப்பு சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த 17வயதான மாணவியே இவ்வாறு தற்கொலை செய்துள்ளார்.

அவரது மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,30)

## மோ.சைக்கிள்...

கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்பாக ஏ9 வீதியில் நேற்று மாலை 5 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

இதில் கிளிநொச்சி விவேகானந்தா நகரைச் சேர்ந்த செல்லப்பா சந்திரகுமார் என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

ஏ9 வீதி வழியாக பரந்தன் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியால் நடந்து சென்றவரை மோதி விபத்துக்குள்ளாகியது.

சம்பவத்தில் பாதசாரியும் மோட்டார் சைக்கிளில் பயணித்தவரும் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். எனினும் பாதசாரி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

விபத்து தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,100,315,316)

## புலிகளின்...

தமிழீழ விடுதலைப் புலிகளால் பயன்படுத்தப்பட்ட அன்பு முகாம் என்றழைக்கப்பட்ட பகுதியிலேயே புதையல் தோண்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாயனூர் காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு புதையல் தோண்ட முற்பட்டபோதே இராணுவப் புலனாய்வாளர், பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தளை, கொழும்பு, கண்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஐவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-3,100,316)

## வடக்கில் நேற்று...

மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனைகளில் 7 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்கள் யாழ்ப்பாணம் நியூ மாக்கற் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ்.பல்கலைக்கழக ஆய்வு கூடங்களில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனைகளில் 22 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் யாழ்.போதனாவில் 07 பேர் (தனிமைப்படுத்தலில் இருந்தவர்கள் 06 பேர், வெளிநோயாளர் பிரிவில் ஒருவர்) யாழ்.மாநகர எல்லைக்குள் 157 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் 07 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

திருநெல்வேலியில் 02 பேர் (ஒருவர் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீட வவுனியா மாணவி, தனிமைப்படுத்தலில் இருந்தவர்) உடுவில் பிரதேசத்தில் 02 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அறிகுறியுடன் சென்ற ஒருவர். கிளிநொச்சி, முல்லைத்தீவில் தலா ஒருவர் என தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-3,18,33)

## பொலிஸார்...

போக்குவரத்து அதிகாரி, நேற்றுமுன்தினம் வீதியில் வைத்து பட்டப்பகலில் நபர் ஒருவர் மீது நடத்திய வீடியோ வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்தச் சந்தர்ப்பத்தில் குறித்த தாக்குதலுக்கு இலக்காகிய நபரால் பதில் தாக்குதலை பொலிஸார் மீது நடத்தியிருக்கலாமா? என பொலிஸ் ஊடகப் பேச்சாளரிடம் வினவியபோது, முடியும் என்று அவர் பதிலளித்திருக்கின்றார்.

குற்றவியல் தண்டனைச் சட்டக் கோவையின் 92, 93ஆம் பிரிவுகளில் அதற்கான விளக்கம் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## இலங்கை கடற்...

பத்திரத்தை வழங்கவுள்ளதாக ஊடகங்களில் வெளியான தகவல்கள் குறித்து, நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கருத்துக் கூறும்போதே அமைச்சர் உதய கம்மன்பில மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்த விடயத்தில் அமைச்சரால் தனியாகத் தீர்மானம் எடுக்க முடியாது. அமைச்சரவையில் கலந்துரையாடித் தீர்மானிக்க வேண்டும். ஆனால், இதுவரையில் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவ்வாறான யோசனையை அமைச்சரவையில் சமர்ப்பிக்கவில்லை.

இதனால் அரசு என்ற ரீதியில் இந்திய மீனவர்களுக்கு இலங்கைக் கடலில் மீன் பிடிக்க எந்த வகையிலும் அனுமதி வழங்கப்படவில்லை என்றார். (ம-3)

## கலப்பு முறையில்...

தலைவர்களைக் கூட்டி இறுதித் தீர்மானத்தை எடுக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதனிடையே, தற்காலத்தில் தேர்தல் ஒன்று நடக்குமானால் அரசு தோல்வியடைவது நிச்சயம் என ஆனந்த தேரர் அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இலங்கையில் தற்போதிருக்கும் சூழ்நிலையில் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டாம் என தெரிவித்து முக்கிய பௌத்த தேரர்கள் ஒன்றிணைந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளனர்.

முருத்தெட்டுவே ஆனந்த தேரர், கசப்ப தேரர், விமல ஜோதி தேரர் உட் பட பல தேரர் களின் கையொப் பத்துடன் இந்தக் கடிதம் ஜனாதி பதிக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ம-3)

## தமிழ...

போது மிக பழமையான தமிழரின் தொல்பொருள் அடையாளங்கள் சில கண்டுபிடிக்கப்பட்டு மீள்நிர்மாணம் செய்யப்பட்டிருக்கின்றது.

யாழ்.மற்றும் கிளிநொச்சி மாவட்ட தொல்லியல் அகழ்வு அதிகாரி மணிமாறன் தலைமையில் குறித்த எச்சங்கள் மீள் நிர் மாணம் செய்யப்பட்டது.

18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வடமராட்சியில் இருந்து போக்குவரத்திற்கு பயன்படுத்தப்படும் வீதியோரமாக வரணிப் பகுதியில் இந்த தொல் பொருள் எச்சங்கள் அமைக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது.

அக்காலப்பகுதியில் வீதியால் போக்குவரத்தை மேற்கொள்பவர்கள் மற்றும் சுமையை சுமந்து வருபவர்கள் சுமையை சுமைதாங்கியில் இறக்கி வைத்து களைப்பாறி நீர் அருந்தி விட்டு செல்லும் வகையில் குறித்த குடிநீர் கிணறும், சுமைதாங்கியும் அமைந்துள் ளது. இது 1960ஆம் ஆண்டு வரை பாவனையில் இருந்ததாகவும் பின்னர் கைவிடப்பட்ட நிலையில் சிதைவடைந்திருந்தது எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு இருந்த குறித்த தொல்லியல் எச்சங்கள் தற்போது வீதி அகலிப்பு பணியின் போது கண்டுபிடிக்கப்பட்டு தொல்லியல் அகழ்வு அதிகாரிகளால் அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டு அக்காலத்தில் அமைக்கப்பட்டிருந்த அளவுகளில் தற்போது மீள்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## சிறுவன் உயிரி...

ஆலங்குளம் பகுதியில் உழவு இயந்திரம் மோதியதில் 8 வயது சிறுவன் உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை இந்த அனர்த்தம் இடம்பெற்றதாக பொலிஸார் கூறினர்.

உயிரிழந்த சிறுவனின் சடலம் அக்கரைப்பற்று வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

பாடசாலைக்கு சென்றுகொண்டிருந்த சிறுவன் மீது உழவு இயந்திரம் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது உழவு இயந்திரத்தை செலுத்திய இளைஞர் தலைமறைவாகியுள்ளதாக பொலிஸார் கூறினர்.

எனினும், உழவு இயந்திரத்தின் உரிமையாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)


சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2021/03/30 — சீட்டிழுப்பு இலக்கம் 1587
சுப்பர் இலக்கம் 04 — வெற்றி இலக்கங்கள் 02 20 42 51

தன நிதானய
திகதி - 2021.03.30
சீட்டிழுப்பு இலக்கம் - 479
K 13 60 68 82
ஆங்கில எழுத்து — வெற்றி இலக்கங்கள்

கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 30.03.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2737
ஆங்கில எழுத்து D — வெற்றி இலக்கங்கள் 23 30 40 50

மஹஜன சம்பத
திகதி 2021/03/30
சீட்டிழுப்பு இலக்கம் 4442
D 6 9 9 4 5 1

மெகா பவர்
திகதி 30/03/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0803
R 04 — 02 19 59 60

அத கோடிபதி
கிழமை: செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1238
வர்ணம்: இள நீலம்
சீட்டிழுப்பு திகதி: 30.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 123,230,815
வெற்றி இலக்கங்கள் 42 56 58 75 — ஆங்கில எழுத்து O

சனிதா
சீட்டிழுப்பு இல: 3568
வர்ணம்: இள நீலம்
சீட்டிழுப்பு திகதி: 30.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 34,130,523
வெற்றி இலக்கங்கள் 11 41 49 61 — ஆங்கில எழுத்து H

ராசி
சுப்பர் ஜக்பொட் 22,39,849/=
திகதி: 30.03.2021
வெற்றி வாரம்: 3119
வர்ணம்: சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 32 34 41 59 — மீனம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 12,003,620

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1412 — நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 30/03/2021 — தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் L 27 57 74 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் 51,733,081=

கப்றுக
L 03 06 62 67
709
30.03.2021 செவ்வாய்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 78,870,295
தொ.பே: 0112 336 546/47 Web: www.dlb.lk


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஜெனிவா தீர்மானத்தை நடைமுறைப்படுத்தாவிட்டால் ஐ.நா படை இலங்கையில் களமிறங்கும்

## சுமந்திரன் எம்.பி எச்சரிக்கை



(கொழும்பு)

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை இலங்கை அரசு முறையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்காவிட்டால், ஐ.நா அமைதி காக்கும்படை இலங்கைக்கு வரும் அபாயம் இருப்பதாக தமிழ் தேசிய கூட்டமைப்பு எச்சரித்துள்ளது.

கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளர் எம். ஏ.சுமந்திரன் இதை தெரிவித்ததாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவை யின் தீர்மானங்களை அமுல்படுத்துவதில் அரசாங்கம் உறுதியாக இல்லை என்று சில அமைச்சர்கள் கூறியிருந்தாலும், அந்த தீர்மானங்கள் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதே உண்மை.

பல ஆண்டுகளாக முன்மொழியப்பட்ட ஜெனிவா தீர்மானங்களை செயல்படுத்த அந்த நேரத்தில் ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள் தவறிவிட்டன.

எனினும் தற்போது இலங்கையின் நிலைமை மோசமடைந்துள்ளதாகவும், அத்தகைய துரதிர்ஷ்டவசமான சூழலில் ஐ.நா அமைதிகாக்கும் படை இலங்கைக்கு வரும் என்றும் அவர் தெரிவித்ததாக செய்தி வெளியாகி உள்ளது.

மேலும் ஜெனிவா மனித உரிமைகள் ஆணையத்தின் பரிந்துரைகளின்படி, மனித உரிமை மீறல்கள் மற்றும் ஜெனிவாத் தீர்மானங்களை அமுல்படுத்துவதில் இலங்கை அரசாங்கத்திற்கு பெரும் பங்கு உள்ளது என்பதை அமைச்சர்கள் புரிந்து கொண்டு அறிக்கை வெளியிட வேண்டும் என்றும் சுமந்திரன் தெரிவித்ததாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-03)


**கட்டடம் வாடகைக்கு**

சாவகச்சேரி, நகர்ப்பகுதி கண்டி வீதியில் வாகனத் தரிப்பிட வசதியுடன் நான்கு அறைகள் கொண்ட வீட்டு கட்டடம் வாடகைக்குண்டு.
வியாபார களஞ்சியத்திற்கோ, அலுவலக பாவனைக்கோ பொருத்தமானதாக இருக்கும்.

(C-1847)

தேவைப்படுவோர் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

077 940 0963


# சர்வதேச தொடர்புகள் குறித்து ஜனாதிபதி சு. கட்சியிடம் ஆலோசனை பெற வேண்டும்

## கலாநிதி தயான் ஜயதிலக

(கொழும்பு)

ஜனாதிபதிகோட்டபாய ராஜபக்ச சர்வதேச தொடர்புகள் குறித்து ஆலோசனைகளை அதுபற்றி தெரியாதவர்களிடம் கேட்காது, சர்வதேச தொடர்புகள் சம்பந்தமான வரலாற்றை கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிடம் ஆலோசனை பெற்றிருக்க வேண்டும் என கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நட்பு நாடாக காட்டிக் கொண்ட உக்ரைன், ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில், இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட யோசனைக்கு ஆதரவாக வாக்களித்தமை குறித்து கருத்து வெளியிடும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

நட்பு நாடு என்ற அடிப்படையில், ஒரு நாடு தொடர்பாக மற்றைய நாடுகள் மதிப்பீடு செய்வதில்லை. மனித உரிமை பேரவையில் உக்ரைன் நாட்டின் செயலானது இலங்கை அரசின் சர்வதேச தொடர்புகள் குறித்த புரிதலை நன்கு வெளிப்படுத்தியுள்ளது என்றார். (ம-03)


**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

TVS wego மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.
(BFC / 28,000 km / கறுப்பு நிறம்)
(6404)

077 898 9691

யாழ்ப்பாணம்

**புதிய பிரிவு A/L 2023 கணக்கீடு**

திரு. க. பா. பாலகஜன்
M.Com (Hons), B.Com (Jaf.),H.N.Dip.-in. ACC.,Dip.-in-Edu.

பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள்
கொழும்புத்துறை - சனி, ஞாயிறு 2.15 p.m - 3.30 p.m
கந்தர்மடம் - சனி, ஞாயிறு 7.00 a.m - 8.00 a.m
Zoom class - திங்கள்,வெள்ளி 7.30 p.m - 8.30 p.m
A/L 2021 & DAY, A/L 2022 வகுப்புகளும் நடைபெறுகின்றன.
புதிய அனுமதிகளுக்கு அழையுங்கள்.
(6353)

077 216 8884

**வீடு வாடகைக்கு**

கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்த கற்பக விநாயகர் கோவில் பின் வீதியில் உள்ள வீடு வாடகைக்கு உண்டு. சகல வசதிகளும் உண்டு.(2 அறை, சமையலறை, 2 ஹோல், அத்துடன் பயனுள்ள மரங்களும் உண்டு நல்ல சுற்றாடல்.)
(6364)

☎-077 516 2288

**பல ஆயிரம் கடந்த பதிவுகள்**

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை நிறைவேற்றிய சாதனை

உங்கள் **கல்யாண மாலை**

சர்வதேச இலவச திருமண சேவை

உலகின் எப்பாகத்திலிருந்தும் தொடர்புகொள்ள

www.kalyanamalai.lk

இணையத்தளத்தைப் பாருங்கள்

அதிகரித்துவரும் நிலைய நிர்வாக செலவிற்காக 01.04.2021 இல் இருந்து
பதிவுக்கட்டணம் ரூபாய் 1500/-
சேவைக்கட்டணம் 500 /-



தொடர்பு – கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 720 1005
Email : Kalyanamalai.jaffna@gmail.com

**அண்ணா EXPRESS Courier Services**

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

லண்டன் 1000/=
070 3305500
077 888 9388
(C-1768)

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

**உடனடி வேலை வாய்ப்பு**

V2 TRAVELS
விரைவு பொதிகள் சேவை
(C-1807)

வாடிக்கையாளர் சேவை அலுவலர்

எமது அனைத்து கிளைகளிலும் வேலை செய்யக்கூடியவராகவும் அதிக நேரம் வேலை செய்யக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்

வயது :-35 வயதிற்குட்பட்டோர் (ஆண்கள் மட்டும்)
சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம்
சம்பளம் - 25'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0777068777
v2vacancies@gmail.com

**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS
UK-1000/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி
(C-1767)

0768226240 DHL

**யாழ் கிளை தற்காலிக இடமாற்றம்**

V2 TRAVELS
விரைவு பொதிகள் சேவை

COVID-19 யாழ் நகர முடக்கம் காரணமாக

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். இல் இயங்கிவந்த எமது யாழ் கிளை மறு அறிவித்தல் வரை

College Of International Migration Skills
49A, சப்பல் வீதி
யாழ்ப்பாணம்
(யாழ் பொது நூலகம் அருகில்)
இல் இயங்குகிறது
(C-1807)

0768226241


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.